பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி 14 | வியாழக்கிழமை | (29.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 223

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## பாயாசத்தில் மயக்க மருந்து கொடுத்தே கருணாவின் சகாக்கள் சுடப்பட்டனர்!

### ஏசியா ரிபியூன் இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

கொட்டாவவில் கருணாவின் சகாக்கள் தங்கியிருந்த ஆடம்பர வீட்டில் அகழான் என அழைக்கப்படும் தபோ என்ற விடுதலைப் புலிகளின புலனாய்வுப் போராளி ஒருவர் சேர்ந்திருந்ததாகவும், சம்பவ தினத்தன்று கொலையுண்டவர்களுக்கு மயக்க மருந்து கலந்த பாயாசத்தை அவர் வழங்கியிருந்ததாகவும் ஏசியா ரிபியூன் என்ற இணையத்தளம் தெரிவித்துள்ளது. பிரஸ்தாப புலனாய்வு உறுப்பினரே இதனைச் செய்திருந்தார் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும்,

இவர் செவ்வாய் அன்று செய்தியாளர் மாநாட்டை நடத்தவிருந்தார். இவர் குகனேசனின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்து கொண்டு, நிதிக்கும் உணவு வழங்கலுக்கும் பொறுப்பாக இருந்தார். அவரே உணவு தயாரிப்பதற்கான பொருட்களை வாங்கினார்.

கடந்த சனியன்று இரவு எல்லோருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - முஸ்லிம்கள் அம்பாறையில்சந்திப்பு

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம்களுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று அம்பாறையில் நடைபெற்றது. நீண்ட நாட்களாக நடைபெறாமல் இருந்த இச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு தம்பிலுவில் அரசியல் செயலகத்தில் நடைபெற்றது. கருணாவின் சர்ச்சைகளுக்குப் பின்னரான முதலாவது சந்திப்பு இதுவாகும்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறை தொடருமானால் யுத்தம் வெடிக்கும் அபாயம்!



## விடார் ஹெல்கீசன் எச்சரிக்கை

(நமது நிருபர்)

இலங்கையில் அங்குமிங்குமாக நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடருமானால் "உக்கிரம் குறைந்த" யுத்தம் ஒன்று ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் தென்படுவதாக, சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் எச்சரித்துள்ளார்.

(12ம் பக்கம் பார்க்க)

## விடார் ஹெல்கீசனுடன் டக்ளஸ் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஈ.பி.டி.பீ செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்புக் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையிலான சமாதான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு ஈ.பி.டி.பி பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும்.

தற்போதைய அரசாங்கமும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றனர்.

அதேசமயம், தமிழீழ விடுதலைப் புலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுக் கப்பல் தென்பகுதி கடலில் விபத்து

### 7 மாலுமிகள் சடலமாக மீட்பு

(கொழும்பு)

தென் கடற்பகுதியை அண்மித்த சர்வதேச கடல் எல்லைப் பிரதேசத்தில் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று தீப்பற்றி விபத்துக்குள்ளானது.

## ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கை அரசின் மீது கண்டனம்

### சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக குற்றச்சாட்டு

இலங்கையில் சட்டம் ஒழுங்கு நடைமுறை சீர்குலைந்துவிட்டது எனவும், உடனடியாக ஐ.நா. மனித உரிமைகள் உப அணைக்குழு இவ்விடயத்தில் தலையிட

மைகளுக்கான உப ஆணைக்குழுவின் 56ஆவது அமர்வு ஆரம்பமானது. அனைத்துலக நாடுகளில் இருந்து தேர்வான சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்களை

## 7 மாலுமிகள் சடலமாக மீட்பு

(கொழும்பு)

தென் கடற்பகுதியை அண்மித்த சர்வ தேச கடல் எல்லைப் பிரதேசத்தில் வெளி நாட்டுக் கப்பல் ஒன்று தீப்பற்றி விபத்துக் குள்ளானது.

இந்தக் கப்பலில் கடமையாற்றிய ஏழு வெளிநாட்டு மாலுமிகளின் சடலங்கள் இலங்கைக் கடற்படையினரால் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதாக காலித்துறைமுகப் பொலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக குற்றச்சாட்டு

இலங்கையில் சட்டம் ஒழுங்கு நடை முறை சீர்குலைந்துவிட்டது எனவும், உட னடியாக ஐ.நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழு இவ்விடயத்தில் தலையிட வேண்டும் எனவும் ஐ.நா சபையின் அங்கீ காரம் பெற்ற சர்வதேச நிறுவனங்கள் கோரியுள்ளன. கடந்த திங்கள் முதல் ஜெனீவாவில் ஐ.நா சபையின் மனித உரி மைகளுக்கான உப ஆணைக்குழுவின் 56ஆவது அமர்வு ஆரம்பமானது. அனைத் துலக நாடுகளில் இருந்து தேர்வான சர்வ தேச மனித உரிமைகள் நிபுணர்களை உறுப்பினர்களாகவும், ஐ.நா அங்கீகாரம் பெற்ற சர்வதேச நிறுவனங்களை அவதானி களாகவும் கொண்டு ஆரம்பமான இந்தக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றனர்.

அதேசமயம், தமிழீழ விடுதலைப் புலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கொட்டாவ காட்டுப் பகுதி பொலிஸாரால் சோதனை

(கொழும்பு)

கொட்டாவவில் கருணா அணியைச் சேர்ந்த எட்டுப்பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் சோத னைகளை நடத்துவதற்காக இரண்டு பொலிஸ் குழுக்கள் சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு அருகிலுள்ள காட்டுப்பகுதியில் நேற்று சோதனை நடத்தியதாக நேற்றுக் கொட்டாவப் பிரதேசத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரம பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை உயிரிழந்த எட்டுப்பேரில் அடையாளம் காணப்பட்டுள்ள சடலங்க ளைப் பொறுப்பேற்பதற்காக உறவினர்கள் நீதிமன்றத்தில் அனுமதியினைக் கேட்டுள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனுக்கு சூடு; பொலிஸார் சரண்

(அம்பாறை)

அம்பாறைப் பகுதியில் நேற்று அதி காலை இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். இளைஞன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகச் சந்தே கிக்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியுடன் சரணடைந்திருப்ப தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## செப்ரெம்பர் மாதம் முதல் மின் கட்டணம் உயரும்!

(கொழும்பு)

பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட்ட தையடுத்து எதிர்வரும் செப்ரெம்பர் முதல் மின்கட்டணங்களை 5 வீதத்தால் அதிகரிப பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள் ளது.

மின்சக்தி எரிபொருள் அமைச்சு இதற் கான அனுமதியை ஜனாதிபதியிடம் கோரிய போது - மின்கட்டணங்களை 5 வீதத்தால் அதிகரிக்க ஜனாதிபதி அனுமதி வழங்கி யுள்ளார்.

ஏற்கனவே மின்சாரசபை 26 பில்லியன் ரூபா கடனில் இயங்கிவருகிறது. இக் கடனை நிவர்த்தி செய்ய இந்தக் கட்டண அதிகரிப்பு உதவும் என்றும், பாராமரிப்புச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சமாதான முயற்சியின் அபாய நிலை குறித்து

# மகிந்த ராஜபக்ஷ - ரணிலுடன் விடார் ஹெல்கீசன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவை நேற்றுக்காலை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது சமாதான முயற் சிக்களுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரை யாடப்பட்டுள்ளன.

பிரதமரின் செயலாளர், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 7 வது தமிழீழ நீதிமன்று மன்னாரில் நேற்று திறப்பு

(கிளிநொச்சி)

தமிழீழத்தின் 7 வது நீதிமன்றம் நேற்று மன்னார் வட்டக்கண்டல் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட நீதிபதி ஒப்பிலான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை முதல் பெண் மாவீரர் மாலதியின் தந்தை, திருமதி தில்லைநாய

(12 ஆம் பக்கம் பார்க்க)

*அன்பு மாணவர்களே!*

உள்ளே

**க.பொ.த (சா/த) பரீட்சை மாதிரி வினாத்தாள் - தமிழ் மொழியும் இலக்கியமும் I**

ஆக்கம்

திருமதி த. சுவாமிநாதன்

ஆசிரியர்

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# தென்மராட்சி வலய மட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

**வாசிப்பு (பிரிவு-1)**

இ.கபிலினி- யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி.
ம.ருகன்யா- கைதடி கலைவாணி வித்தி.
ப.ஜீவிதன்- கைதடி முத்துக் குமாரசாமி ம.வித்தி.

**வாசிப்பு (பிரிவு-2)**

மா.கோபிதா- மீசாலை விக்னேஸ்வரா ம.வித்தி.
இ.கன்னிகா- கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை
பா.நிரோஷா- சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி.

**ஆக்கத்திறன் வெளிபாடு, கதைக்கூறல் (பிரிவு-1)**

ஆ.பானுஷா- சாவ.றோ.க.த.க.பாடசாலை
த.வைதேகன்- உசன் இராமநாதன் ம.வித்தி.
க.சிவனுசன்- கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி.

**ஆக்கம்-எழுத்து (பிரிவு-1)**

த.அபினயா- சாவ.இந்து ஆரம்பப் பாடசாலை
த.நினுஜா- நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை
க.துஷியந்தினி- கொடிகாமம் அரசினர் வித்தி.

**கட்டுரைவரைதல்,கடிதம் எழுதுதல் (பிரிவு-2)**

செ.சுதர்சன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.
இ.எழில்பிரகாஸ்- மந்துவில் றோ.க.த.க.பாடசாலை
க.ஜனா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**கட்டுரைவரைதல், கடிதம் எழுதுதல் (பிரிவு-3)**

யோ.கஜேந்தினி- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி.
க.பிருந்து பியா- விடத்தற்பளை கமலாசனி வித்தி.
ஜெ.சகன்யா- கைதடி முத்துக் குமாரசாமி ம.வித்தி.

**கட்டுரைவரைதல்,இலக்கியம் நயத்தல்(பிரிவு-4)**

ப.ஜனனி- மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
க.மயூரி- மட்டுவில் கமலாசனி வித்தி.
த.மேனகா- இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி.

**தமிழியற் கட்டுரை வரைதல்,இலக்கியம் நயத்தல் (பிரிவு-5)**

க.சுபோதிகா- மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
இ.நிலாஜினி- கைதடி முத்துக் குமாரசாமி ம.வித்தி.
ச.சுகிர்தா- உசன் இராமநாதன் ம.வித்தி.

**இலக்கணப் போட்டி (பிரிவு-4)**

க.தனேஸ்வரன்- இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.
த.பிரசன்னா- மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
த.சிவறஜீவ்- விடத்தற்பளை கமலாசனி வித்தி.

**இலக்கணப்போட்டி (பிரிவு-5)**

சி.சுபேந்தினி- மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
த.நீரஜா- மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வித்தி.
ந.திருவாணி- வரணி ம.வித்தி.

**திறனாய்வுப் போட்டி (பிரிவு-5)**

க.சோபிகா- வரணி ம.வித்தி.

**குறுநாடகம் ஆக்கம் (பிரிவு-4)**

த.தர்மிலா- கைதடி முத்துக் குமாரசாமி ம.வித்தி.
ச.சிறிதரன்- கொடிகாமம் திருநாவுக்கரசு
ம.சதீஸ்- மந்துவில் றோ.க.த.க.பாடசாலை

**குறுநாடகம் ஆக்கம் (பிரிவு-5)**

ந.பவுத்திரா- கைதடி முத்துக் குமாரசாமி ம.வித்தி.
க.ஜனனி- சாவ.இந்துக்கல்லூரி.
ம.செந்தூரன்- கொடிகாமம் திருநாவுக்கரசு

**கவிதை ஆக்கம் (பிரிவு-4)**

நா.சுறானி -மட்டுவில் சரஸ்வதி வித்தி.
த.மௌலியா- நாவற்குழி ம.வித்தி.
ப.சர்வசொருபி-சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**கவிதை ஆக்கம் (பிரிவு-5)**

சி.சிவரூபன் - மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வித்தி.
க.கனகாம்பிகை- சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
க.அரிசோபா- சாவ.இந்துக்கல்லூரி.

**சிறுகதை ஆக்கம் (பிரிவு-4)**

இ.சாருகா- மீசாலை விக்னேஸ்வரா ம.வித்தி.
வி.தாட்சாயணி- கொடிகாமம் திருநாவுக்கரசு
சு.சரணியா- சாவ.டிறிபேக் கல்லூரி.

**சிறுகதை ஆக்கம் (பிரிவு-5)**

பா.உஷாநந்தினி-கொடிகாமம் திருநாவுக்கரசு.
ச.லாவண்யா- சாவ.டிறிபேக் கல்லூரி.
கு.சரிதா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**பேச்சு (பிரிவு-1)**

சி.ரூபகானன்-மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
க.கஸ்தூரியா- விடத்தற்பளை கமலாசனி வித்தி.
ந.யசிந்தன்- காச்சாய் அ.த.க.பாடசாலை.

**பேச்சு (பிரிவு-2)**

நி.சோபிதா- சாவ.இந்துக் கல்லூரி.
கு.பிரியங்கா- வரணி ம.வித்தி.
சி.லக்சியா- மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.

**பேச்சு (பிரிவு-3)**

சி.கோபிதன்- சாவ.இந்துக் கல்லூரி.
சி.அகல்யா- மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
நி.கஜன்- கைதடி விக்னேஸ்வரா ம.வித்தி.

**பேச்சு (பிரிவு-4)**

த.பிரதீபன்- சாவ.டிறிபேக் கல்லூரி.
அ.பிரசன்னா- சாவ.இந்துக் கல்லூரி.
மோ.சசிதா- மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.

**பேச்சு (பிரிவு-5)**

தெ.சொந்தூரன்- சாவ.இந்துக் கல்லூரி.
க.சுதாஸ்கரன்- மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
யோ.மேனகா- சாவ.டிறிபேக் கல்லூரி.

**பாவோதல்(பிரிவு-1)**

ப.நர்த்தகி - சாவ.இந்து ஆரம்பப் பாடசாலை
த.நிஷானி- வரணி ம.வித்தி.
யோ.கார்த்திகா-குடமியன் அ.த.க.பாடசாலை.

**பாவோதல்(பிரிவு-2)**

பா.நிலாஜினி - மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
த.நிதர்சனா உசன் இராமநாதன் ம.வித்தி.
த.குணாஜினி- வரணி ம.வித்தி

**பாவோதல்(பிரிவு-3)**

செ.வினுஜா - சாவ.இந்துக் கல்லூரி.
ஜெ.சிந்துஜா- மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
சிவேணுமதி- மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.

**பாவோதல்(பிரிவு-4)**

பா.கஜலக்சன் - சாவ.இந்துக் கல்லூரி.
இ.தனுஷன்- கொடிகாமம் அரசினர் வித்தி.
ந.ஜெயசக்தி- விடத்தற்பளை கமலாசனி வித்தி.

**பாவோதல்(பிரிவு-5)**

வீ.ஜீவினி- கொடிகாமம் திருநாவுக்கரசு
ப.உதயசாந்தினி- உசன் இராமநாதன் ம.வித்தி.
ப.வைஷ்ணவி - சாவ.இந்துக் கல்லூரி.

**திறந்த போட்டி (விவாதம்)**

ச.நஜீபா, மு.கோகிலறமணி, ப.லோகேஸ்வரன் — வரணி ம.வித்தி.

மு.சத்தியப்பிரியா, க.கௌதமி, தே.றஜீந்திரா — இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.

(உ-29)

# மீளக்குடியமர்வோர் எண்ணிக்கை வீழ்ச்சி

(கொழும்பு)

ஜனவரி 2004 இல் 10 ஆயிரத்து 803 பேர் வடக்கு-கிழக்கிற்கு மீளக்குடியேறவந்துள்ளனர். ஆனால், ஜூன் மாதம் இந்த எணணிக்கை 2ஆயிரத்து 553 ஆக குன்றந்துள்ளது என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் 4 ஆயிரத்து 500பேர் திரும்பியுள்ளனர். இவர்களில் பெரும்பாலான எண்ணிக்கையானோர் யாழ்.மாவட்டத்திற்கே திரும்பியுள்ளனர் என்று மேலும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு பல காரணங்கள் கூறபபடுகிறது.சமாதான சூழல் அச்சுறுத்தலுக்குள்ளாகியமை, இந்தியாவிலிருந்து நாடு திரும்புவர்களின்எண்ணிக்கை குறைவடைந்தமை என்பன முக்கிய காரணங்களாகத் தெரிவிக்கப்படுகிறது. புலிகளின கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே மககள் மீளக்குடியேறுவது குறைவாக உள்ளது.

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் வீடுதிரும்பியது, 3 இலட்சத்து 73ஆயிரம் வரையில் அதிகரித்துள்ளது. 2ஆயிரம் பேர் கிளிநொச்சிக்கும் 700 பேர் மன்னருக்கும் திரும்பியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திற்குமட்டும் 1இலட்சத்து 92ஆயிரம்பேரும் கிளிநொச்சிக்கு 85ஆயிரம் பேரும் முல்லைத்தீவிற்கு 45 ஆயிரம் பேரும் இவ்வருடத்தில் மட்டும் திரும்பியுள்ளனர்.

இந்தியாவிலிருந்து ஜூனில் 772பேர் நாடுதிரும்பியுள்ளனர். பெப்ரவரி முதல் 10ஆயிரம் பேர் இவ்வாறு நாடுதிரும்பியுள்ளனர். மன்னாருக்கு 400 பேரும், வவுனியாவிற கு 348 பேரும் ஜூனில் திரும்பியுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-6)

# அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் எதிர்க் கட்சி வெற்றியடையாது

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிபடத்தில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை ஆட்சிபீடத்தில இருந்து கவிழப்பவதற்கு எதிர்க்கடசியினர் மேற்கொள்ளும் முயற்சிகள் ஒருபோதுமே வெற்றி பெறப் போவதில்லை என்று மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழில் வல்லுநர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினர் தமக்கு சாதகமாகவும் ஆளும் கட்சியை பாதிக்கக் கூடியவாறு பொய்யான கூற்றுக்களை வெளியிடுவதன் மூலமும் நாட்டு மக்களைத் தவறான வழியிலிட்டுச் செல்வதாக அவர் குற்றஞ் சாட்டினார்.

இதேவேளை, கட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிசிர பண்டார சேனாரத்ன அங்கு கருத்துரைக்கையில்,

ஜே.வி.பி.யுடன கூட்டுச் சேர்ந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு அமுல் செய்யப்படுவதாகக் கூறினார்.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜூலைக் கலவரத்தின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்த தீர்மானத்திற்கு நன்றி தெரிவிப்பது அவசியம் எனவும் தெரிவித்தார்.(உ-121)

### இலைக்கஞ்சி வழங்கல்

உளளூராட்சி வாரத்தின் தொடா நிகழ்வாக யாழ்.மாநகரசபையின் முன்பள்ளிச் சிறார்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மா நகர சபை பாலர் பாடசாலையில் யாழ்.மாநகரசபையின் செயலாளர் வே.குலநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

(உ-19,5)


## சிறுவிளம்பரம்

### (O/L)கணிதம்

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 39 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 லிருந்து 60 மணித்தியாலங்களில் A,B பெறுபேறடைவதற்கு கற்பிக்கப்படும். சந்திக்கும் நேரம் காலை6.00-9.00.

க.ஆறுமுகநாதன்
10,கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி. (8695)

### தேவை

கணனிப் பயிற்சியில் ஆரம்பக் கல்வியை கற்றுக் கொடுக்கக்கூடிய பெண்பிள்ளை தேவை.

சரவணா அச்சகம்
சி.எஸ்.கே.சந்தி, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (8696)


### ஆன்மீகச் சொற்பொழிவு

(நல்லூர்)

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் நல்ல்ல நாவலர் மணி மண்டபத்தில் நடாத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை, "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" எனும் தலைப்பில் ஆசிரியர் இராம. ஈஸ்வரன் சொற் பொழிவாற்றவுள்ளார். (உ)

### திருமுறை பெருவிழா

(யாழ்ப்பாணம)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடாத்தும் திருமுறைப் பெருவிழா எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை வண்ணார் பண்ணை ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தானத்தில் ஆயலத் தின பரிபாலன சபையின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது.

பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம் பெறும் இவ்விழாவில்,தேவாரத் திரட்டு முற்றோதல், திருமுறைச்சுவடி வதி உலா ஆகியவற்றுடன் அகத்தியர் தேவாரத் திரட்டு நூல் வெளியீடும் இடம்பெறும். (உ)

### இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம)

பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் மேற்பிரிவு மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை அனைத்து மாவட்டங்களிலும் எதிர்வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு இப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் இதற்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைக்கப் பட்டுளஎன. விண்ணப்ப முடிவுத தினம் ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதியாகும். (உ)

### அரசின் முடிவுக்கு ஐ.தே.க.வரவேற்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் அவரது அமைச்சிற்காக கட்டடம் ஒன்று குத்தகைக்கு எடுத்த விடயம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு தேர்வுக்குழு ஒன்றை நியமிப்பதற்கு எடுத்த முடிவை ஐ.தே.க.வரவேற்றுள்ளது.

இத்தேர்வுக்குழு கருணாநாயக்க குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க உதவும் என்றும் அக் கட்சி தெரிவித்துள்ளது. தேர்வுக் குழு அமைப்பதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவது என ஐ.தே.க. அரசியல் விவகார ஆணைக் குழு தீர்மானித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

திஸ்ஸ அத்தநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட தேர்வுக் குழுவை நியமிப்பது என்ற தீர்மானத்தை முன்னெடுத்து செல்வது என அரசியல் விவகார ஆணைக்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

(உ-6)

# யா/தே.கல்வியியல் கல்லூரி நடாத்திய ‘அழகெழில்’ போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம் யூலை 24, 25ஆம் திகதிகளில் நடாத்திய "அழகெழல்" 2004 கலைத்துறைசார் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய பாடசாலைகள் மற்றும் மாணவர் பெயர் விபரங்கள் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்ற ஒழுங்கில் தரப்படுகின்றன.

பாராட்டுச் சின்னங்கள் சான்றிதழ் பெறுவோரின் பெயர்களும் இதில் தரப்படுகின்றது.

**(தரம் 4,5)**

***சித்திரப்போட்டி***

ச.சிவமிந்தன் - யா.சென் ஜோன்ஸ் கல்லூரி, மா.சோனுஜா - உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், ம.இனியாள் - மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை.

***பாராட்டுச் சின்னங்கள் பெறுவோர்***

பெ.டினேசன் - புனிதஜோன் பொஸகோ வித்தியாலயம், சி.சிவகணேசன் - இணுவில் மத்திய கல்லூரி, மு.விதுன் - இந்து ஆரம்ப பாடசாலை.

***சான்றிதழ் பெறுவோர்***

க.அனித்தா - நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், து.கௌசிகா - திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை, ஜெனித்தா - சில்லாலை றோ.க.த.க. பாடசாலை, நி.அஜந்தன் - தொல்புரம் அமெரிக்கன் த.க.பாடசாலை.

**(தரம் 6,7,8)**

து.தணிகைக்குமரன் - உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், சி.கௌசல்யன் - சென் ஜோன்ஸ் கல்லூரி, வி.சாரதாதேவி - திருக்குடும்ப கன்னியர் மடம்.

***பாராட்டுச் சின்னங்கள் பெறுவோர்***

சி.பிரதீபா - இந்து மகளிர் கல்லூரி, சி.லிசானன் - ஊர்காவற்துறை சென் அன்ரனிஸ் கல்லூரி, கு.தர்சிகா - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

***சான்றிதழ் பெறுவோர்***

டெ.அரோஜினி - ஊர்காவற்றுறை புனிதமரியாள் மகளிர் வித்தியாலயம், இ.டர்சன் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை, வ.மாதுகா - தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி, சு.ஜீவாஸ்கரன் - கோப்பாய் சரவாணபவானந்தா வித்தியாலயம.

**(தரம் 9,10,11)**

கு.ராகுலன் - குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம், அ.ஜோன் ஜிப்பிரின்னோ - சண்டிலிப்பாய் இந்து கல்லூரி, செபிரகாஸ் - ஹாட்லிக் கல்லூரி, கு.குஜேந்தி - ஊர்காவற்துறை புனித மகளிர் வித்தியாலயம்.

***சிறப்புச் சின்னமும் சான்றிதழும்பெறுவோர்***

ரா.சுதர்சன் - நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், கி.தேவதீசன் - கலாநிதி ஆ.தியாகராஜா மகாவித்தியாலயம், யே.மொறின் கொன்செப்ரா - திருக்குடும்ப கன்னியர் மடம்.

***சான்றிதழ் பெறுவோர்***

யோ.நிரோஜினி - திருக்குடும்ப கன்னயர் மடம், ச.அபிராமி - இந்து மகளிர் கல்லூரி, ச.சர்மலா - பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப்பாடசாலை, வி.ஶ்ரீவித்தகன் - இந்துக் கல்லூரி.

**(தரம் 12,13)**

த.தஜேந்திரன் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, ர.சுதன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மு.நிசாளினி - ஸ்கந்தவரோதயக் கல்லூரி, க.சுஜே - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

***சிறப்புச் சின்னமும் சான்றிதழும்பெறுவோர்***

து.நிசாந்தன் - மானிப்பாய் மொமோறியல் ஆங்கிலப் பாடசாலை, ப.அஜிவன் - மத்திய கல்லூரி, ஜோ.காமல் - திருக்குடும்ப கன்னியர் மடம்.

***சான்றிதழ் பெறுவோர்***

ம.துளசிகா - இராமநாதன் கல்லூரி, இ.ஆரணி - திருக்குடும்ப கன்னியர் மடம், தி.தயாளினி - கொக்குவில் இந்துக் கல்லூரி, க.குமரன் - ஹாட்லிக் கல்லூரி.

***ஆசிரியர்களுக்கான ஓவியப் போட்டி***

செ.சிறீலோகநாதன் - புனித பத்திரிசியார் கல்லூரி, க.சுதேஸ் - விக்னேஸ்வராக் கல்லூரி, எம்.யசீர் மியாத் - வைத்தீஸ்வராக் கல்லூரி, க.தவதாசன் - ஶ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.

***சிறப்புச் சின்னமும் சான்றிதழும்பெறுவோர்***

த.மாலினி - புற்றளை மகா வித்தியாலயம், நா.இரூஜன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தி.தீபன் - பண்டத்தரிப்புப் பெண்கள் உயர்தரப் பாடசாலை.

***சான்றிதழ்***

கே.பிரபாகரன் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, து.திலீப்குமார் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அ.அன்ரன் கிறேசியன் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கி.நிறஞ்சன் - மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், அ.அருமைநாதன் - இணுவில் இந்துக் கல்லூரி.

***சிறுவர் நாடகம்***

நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை, அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம், நவாலி மகாவித்தியாலயம்.

***சின்னமும் சான்றிதழும்பெறுவோர்***

ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி. மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை. பணடத்தரிப்பு இந்துக்கல்லூரி.

***தனிநடிப்பு***

பா.எட்வெட் சுஜீபன் - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை, இ.ஸ்ராலின் - பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சா.சந்துரு - சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

***சிறப்புச் சின்னமும் சான்றிதழும்பெறுவோர்***

ஜெ.வைஸ்ணவி - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, சி.சிவதாரணி - இராமநாதன் கல்லூரி, சுன்னாகம். யோ.அன்ரனி விமல்ராஜ் - சில்லாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை.

***பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்***

செ.அகல்யா - மல்லாகம் மகாவித்தியாலயம், யோ.யாழினி - பண்டத்தரிப்பு உயர்தரப் பாடசாலை, த.பாவினி - பண்டத்தரிப்பு உயர்தரப் பாடசாலை, ம.நிசோனா - நல்லூர் இந்து தமிழ் கலவன் பாடசாலை.

***கிராமிய நடனம்***

இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, கொட்டடி நமச்சிவாயம் வித்தியாலயம்.

***அழகெழல் சிறப்புச் சின்னமும்சான்றிதழும் பெறுவோர்***

இந்து ஆரம்பப் பாடசாலை, புனித பெனடிக் வித்தியாலயம், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.

***சான்றிதழுக்குரியது***

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, இணுவில் மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

***கிராமிய இசை அபிநயப் பாடல்***

இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம், மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்.

***சிறப்புச் சின்னமும் சான்றிதழும்பெறுவோர்***

நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், திருக்குடும்ப கன்னியர்மட வித்தியாலயம், நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை.

***பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்***

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, இந்து ஆரம்பப் பாடசாலை, நல்லூர் காசிப்பிள்ளை மகாவித்தியாலயம், பெரிய புலம் மகாவித்தியாலயம்.

பரிசளிப்பு விழா, வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகப் பங்குபற்றும் பொருட்டு செப்ரெம்பர் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். (உ)

## சுதந்திர ஊடக அமைப்பு பொலிஸ் மா அதிபருக்கு கடிதம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வட்டாரங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு பொலிஸாருக்கு எந்தவிதமான அதிகாரங்களும் கிடையாது. அத்துடன் ஊடகவியலாளர்களின் தகவல் வட்டாரங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்படுமாயின் அது அடிப்படை உரிமை மீறலாகும் என்று சுதந்திர ஊடக அமைப்பின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம குறித்து தமிழ்நெட் இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்தி தொடர்பாக அதன் ஆசிரியரை பொலிஸ் விசாரணை செய்யப் போவதாக பொதுப் பாதுகாப்புச் சட்டம் ஒழுங்குகளுக்கான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்திருந்தார்.

ஊடகவியலாளர்களின் கருத்து சுதந்திரப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனறும் சுதந்திர ஊடக அமைப்பு பொலிஸ் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.(உ-121)

## உள்ளூராட்சி வாரத்தில் கோப்பாயில் சிரமதானம்

(கோப்பாய்)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி வீ.இரத்தினவேல் தலைமையில் கோப்பாய் பகுதியில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டெங்கு நோயை ஒழிக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கையாக பொதுக்கிணறுகள், மதகுகள், வாய்க்கால்கள், சந்தைகள் என்பன துப்புரவு செய்யப்பட்டன. அத்துடன் இருபாலை, கோப்பாய் மயானங்களும், வீதிகளும் செப்பனிடப்பட்டது.

இச சிரமதானப்பணியில் ஆயுளவேத மருத்துவ உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் உப அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர். (இ)

## தூரநோக்குடைய ஊடகக் கொள்கையை அனான் வலியுறுத்து

(கொழும்பு)

பொது மக்களின் நலன் கருதி ஆசிய நாடுகளின் ஒளிபரப்பா



ளர்கள் பகிரங்க தகவல் நிலையங்களை அமைக்கும் நோக்கத்துடன் ஊடகக் கொள்கையை வகுக்க முற்படவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான், கொழும்பில் நடைபெறும் ஆசிய, பசுபிக் ஒளிபரப்பு அபிவிருத்தி நிறுவனத்தின் மூன்றாவது பொது மாநாட்டிற்கு அனுப்பியுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனான் அனுப்பிய செய்தியில் மேலும்,

துரித தகவல் தொழில்நுட்ப மாற்றம் முன்னெப்போதும். இல்லாத வகையில் தகவல் பரிமாற்றத்தில் கதவுகளைத் திறந்து விட்டுள்ளது. ஆனால், சர்வதேச நாடுகளில் எல்லை கடந்து மாத்திரம் அல்லாமல் அரசாங்க தனியார் துறையினருக்குமிடையிலும் தேவையான ஒத்துழைப்பைக் கட்டி எழுப்ப ஆசிய, பசுபிக் ஒளிபரப்பு அபிவிருத்தி நிறுவனம் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த மாநாடு ஒரு வாரகாலம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சட்டமுதுமாணிப் பட்டம்

(கொழும்பு)

வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் சட்டமுதுமாணிப் பட்டத்தை இலங்கையில் இருந்தவாறே பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை சட்டக்கல்லூரியும் லண்டன் ஹோல்பேர்ண் கல்லூரியும் இணைந்து இதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளன.

இதன் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றபோது, இதில் பிரதமநீதியரசர் சரத என் சில்வா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (உ-4,62)

## பாடசாலைகளுக்கு தென்னங்கன்றுகள்

(தனங்கிளப்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட 15 பாடசாலைகளுக்கு, புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் தெய்வக் குழந்தை இல்ல நிர்வாகத்தினால் தலா 50 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. (உ-37)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

2004 ஆம் ஆண்டிற்கான வலயமட்ட தமிழ்த் தினப்போட்டியில் பங்கு பற்றி முதலாம் இடத்தைப் பெற்ற தென்மராட்சி வலய மாணவர்களுக்கும் பயிற்சி அளித்த ஆசிரியர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-29)

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பத்திரிகையாளருடனான கலந்துரையாடல் ஒன்றை இன்று இரவு 7.30 மணிக்கு பேரவையின் கேட்போர் கூடத்தில் நடாத்தவுள்ளது.

பேரவைத் தலைவர் ப.பகீரதன் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் பேரவை உறுப்பினர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் அனைத்துப் பத்திரிகையாளரையும் கலந்து கொள்ளுமாறு பொறுப்பாளர் ந.கண்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

## தளபாடப் பற்றாக்குறை

(சாவகச்சேரி)

சங்கானை அரசினர் மருத்துவமனையில் நிலவும் தளபாடப் பற்றாக்குறையைப் போக்க உதவுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சங்கானை ப.நோ.கூ.சங்கம் மேற்படி உதவியை வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாகத தெரியவருகிறது. (உ-29)

## ஆடிவேல் இரத பவனி

(சாவகச்சேரி)

நல்லூர் ஶ்ரீ பால கதிர்காம தேவஸ்தான ஆடிவேல் இரத பவனி எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்திலிருந்து 2ஆம் திகதி காலை ஆரம்பமாகும் இரத பவனி யாழ்.நகரின் முக்கிய வீதிகளூடாக வண்ணை நாச்சிமார் ஆலயம், வீரமாகாளி அம்மன் ஆலயம், வண்ணார் பண்ணை சிவன்கோவில், வண்ணைநாச்சிமார் கோயில், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், அரசடி சிவகாமி அம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்களில் தரித்து நின்று 4 ஆம் திகதி மாலை ஆலயத்தை வந்தடையும். (உ-29)

## ஜயலத் கனடா பயணம்

(கொழும்பு)

முன்னாள் புனரமைப்பு, மீள் குடியமர்த்துகை அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று கனடாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.


கனடா அரசின் உயர் அதிகாரிகள், கனடாவில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகள் போன்றோரை சந்திக்கவிருக்கின்ற ஜயலத் இலங்கை இனப்பிரச்சினையின் இன்றைய நிலைமை பற்றியும் அவர்களுக்குத் தகவல் வழங்க உத்தேசித்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் அக்கறை காட்டும் கனடா பல்கலைக்கழக, கனடா அமைப்புக்களின் பிரமுகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (உ)

# இரண்டாவது தொகுதி வடகொரியர் தென் கொரியாவில் தஞ்சம்

(சியோல்)

பெயர் குறிப்பிடாத தென்கிழக்காசிய நாடொன்றிலிருந்து இரண்டாவது தொகுதி வடகொரியர்களை ஏற்றிக்கொண்டு தென்கொரிய விமானம் ஒன்று இஞ்சியோன் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.




பெண்களும், குழந்தைகளும் அதிகமாகக் காணப்பட்ட இவர்களின் எண்ணிக்கை 227 ஆகும். இவர்களின் வருகைபற்றி அறிவிப்பதில் தென் கொரிய அதிகாரிகள் தயக்கம் காண்பித்தனர். 230 பேர் தென் கொரியா வந்திருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன. அரசாங்கம், வடகொரியர்கள் வருகை பற்றிய செய்திகள் வெளியிடப்படுவதைத் தடை செய்துள்ளபோதும் கடந்த செவ்வாய்க் கிழமை கொண்டுவரப்பட்ட முதல் தொகுதி வடகொரியரின் வருகை தொலைக்காட்சிகளில் ஒளி பரப்பானது.

மனித உரிமைக் குழுக்களின் தகவல்படி வியட்நாம், தாய்லாந்து, கம்போடியா போன்ற தென்கிழக்காசிய நாடுகளில் தங்கியுள்ள வடகொரியர்கள் தென்கொரியாவுக்கு வருவதையே பெரிதும் விரும்புவதாகத் தெரிவித்தனர்.

வடகொரியாவில் நிலவும் வறுமை மற்றும் கம்யூனிஸ கரங்களின் இரும்புப்பிடி, சமூக உரிமைகள் இல்லாமை என்பன காரணமாகவே இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதாக அறிவிக்கப்படுகிறது.

(யே)

# ஈராக் தற்கொலையாளிகள் வற்புறுத்தி அழைக்கப்படுகின்றனர்

(வாஷிங்டன்)

ஈராக்கின் தற்கொலையாளிகளில் பலர் அச்சுறுத்தல் மற்றும் வற்புறுத்தல் காரணமாகவே தமதுயிரை இழக்கிறார்கள் எனும் பயங்கரமான உண்மை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.



தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களில் உயிரிழந்த தற்கொலையாளிகளின் கால்களில் நீண்ட கயிறுகள் காணப்படுவதாகவும், அவர்கள் குண்டு வெடிப்புக்கு முன்னர் தப்பியோடிவிடாமல் கட்டப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சில தற்கொலைத் தாக்குதல் தாரிகளின் குடும்பங்கள் ஆயுத தாரிகளால் பணயமாகப் பிடிக்கப்பட்டு, குண்டுத் தாக்குதல் முடிந்த பின்பே விடுவிக்கப்படுகின்றனர். இவ்வாறான பல குடும்பங்களை அமெரிக்கப் படையினர் விடுவித்துள்ளனர்.


''வீக்கெண்ட் ஜிஹாடிஸ்ட்'' எனப்படும் தாக்குதலில் ஈடுபடுவோர் அயல்நாடுகளிலிருந்து ஈராக்கிற்கு வருவோர். வறுமை காரணமாக இவ்வாறான ஆயுததாரிகளிடம் அகப்பட்டு மனிதக் குண்டுகளாகச் செல்லும் அதிபயங்கரம் நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது.

(யே)

# குண்டுப் பீதியால் யு.எ.எல் விமானம் ஆஸியில் தரையிறக்கம்

(சிட்னி)

குண்டுப்புரளி காரணமாக 246 பயணிகளை ஏற்றிச் சென்ற யு.எ.எல். பயணிகள் விமானம் பயணத்தை இடைநிறுத்தி மீண்டும் அவுஸதிரேலியாவில் தரையிறக்கப்பட்டது.



யு.எ.எல்- 840 பயணிகள் விமானம் நேற்று முன்தினம் சிட்னி விமான நிலையத்திலிருந்து லொஸ் ஏஞ்சல் நகர் நோக்கித் தனது பயணத்தை ஆரம்பித்தது. சுமார் 90 நிமிடங்கள் வானில் பயணித்த பின்னர், விமானத்தினுள் “பொம்'' என்று எழுதப்பட்ட பொதி ஒன்றை அவதானித்த பயணி ஒருவர் விமானச் சிப்பந்திகளுக்கு அதை அறிவித்தார். இதனால் ஏற்பட்ட பீதி காரணமாக விமானி விமானத்தைத் திருப்பிக் கொண்டுவந்து சிட்னியில் தரையிறக்கினார்.

உடனடியாக விமான நிலையத்திற்கான பாதைகள் அனைத்தும் மூடப்பட்டு விமானப் பயணிகள் பாதுகாப்பாக இறக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். விமானத்தின் எரிபொருள் அனைத்தும் வெளியே எடுக்கப்பட்டு விமானம் சோதனைக்குட்படுத்தப் பட்ட போது, இது வெறும் புரளி என்பது கண்டு பிடிககப் பட்டது. “பொப்'' என்று எழுதப் பட்டிருந்த வாசகத்தைப் பயணி ஒருவர் ''பொம்'' என்று வாசித்தமையே புரளிக்குக் காரணம் என்றும பின்னர் அறியப்பட்டது.

ஆயினும் விமானியின் தீர்மானம் சரியானதென்றும், அவரைத் தாம் பாராட்டுவதாகவும் அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோண்ஹவார்ட் தெரிவித்தார்.

(யே)

# குவான்ரன்மோ கைதிகள் பிரான்சுக்குத் திரும்பினர்

(பரிஸ்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கெதிராக அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதல்களின் போது கைதிகளாகப் பிடிக்கப்பட்ட நான்கு பிரென்சுக் கைதிகளை மீண்டும் அந்நாட்டிடம் அமெரிக்கா ஒப்படைத்தது.



குவான்ரன்மோ சிறையில் கடந்த ஒரு வருடகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இநநால்வரும் விடுதலை செய்யப்பட வேண்டுமென்பதில் பிரெஞ்சு அரசாங்கம் அமெரிகாவுடன் தொடர் பேச்சுக்களில் ஈடுபட்டு வந்தது.

ஈராக் யுத்தம், துருக்கியை ஐரோப்பிய யூனியனில் இணைத்துக் கொள்ளுதல் போன்ற விடயங்களில் அண்மைக் காலமாக பிரான்ஸ் அமெரிக்காவுடன் கடுமையாக முரண்பட்டு வருகிறது. இதன் காரணமாக இக் கைதிகளின் விடுதலையும் தாமதப்பட்டு வந்தது. இக் கைதிகள் மீது எவ்வித குற்றச் சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை.

ஆயினும் இவர்கள் பிரெஞ்சுப் பொலிஸாரிடம் விசாரணைகளுக்காகக் கையளிக்கப்படுவர் என்று ஜனாதிபதி ஷராக் தெரிவித்துள்ளார்.

(யே)

# WORLD NEWS உலக தரிசனம்

# பலஸ்தீன பிரதம மந்திரியின் ராஜினாமா வாபஸாகியது

(ராமல்லா)

உள்நாட்டு பாதுகாப்பு அதிகாரத்தைப் பிரதமரிடம் வழங்குவதற்குப் பலஸ்தீன அதிகார சபையின் ஜனாதிபதி யசிர் அரபாத் உடன்பட்டதையடுத்து, பிரதமர் கூரி தனது ராஜினாமாவை வாபஸ் பெற உடன்பாடு தெரிவித்துள்ளார்.

மேற்படி உடன்பாட்டின் காரணமாகக் கடந்த ஒருவார காலமாக இழுபறியிலிருந்து வந்த பலஸ்தீன அதிகாரசபையின் உட்பூசல்கள் முடிவுக்குக் வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அதிகார மாற்றம் குறித்துப் பிரதமரிடம் பத்திரிகையாளர்கள் கேள்வியெழுப்பிய போது, நாங்கள் அதிகாரத்திற்காகப் போட்டியிடவில்லை. ஆனால், ஜனாதிபதி எனக்கு மேலும் சில பொறுப்புகளை வழங்கியுள்ளார் என்று குறிப்பிட்டார்.



உடனடியாக அமைச்சரவையில் மாற்றங்கள் செய்வது குறித்து ஆராயப்பட்டபொழுதிலும் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படாமலேயே கூட்டம் முடிவுற்றதாக அறிவிக்கப்படுகிறது. ஆயினும், அரபாத்துடனான பிரதமரின் முறுகல் காரணமாக பலஸ்தீன சமாதான முயற்சிகள் பின்னடையலாம் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது.

(யே)

# பினோசேயின் வங்கிக் கணக்கை மூடுவதற்கு பிரான்ஸ் பிரயத்தனம்

(மட்ரிட்)

சிரிநாட்டின் முன்னாள் சர்வாதிகாரியும், மனித குலத்திற்கெதிரான கொடுமைபுரிந்த குற்றச்சாட்டில் அகப்பட்டுள்ளவருமான அகஸ்டஸ் பினோசேயின் அமெரிக்க வங்கிக் கணக்கை முடக்கும் விடயத்தில் பிரான்சின் நீதித்துறை முனைப்பாக ஈடுபட்டுள்ளது.



அமெரிக்க செனட் சபையின் தீர்ப்புக்கிணங்கவும் பிரான்ஸின் உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கிணங்கவும் உலகமெங்கிலுமுள்ள வங்கிகள் பினோசேயின் வங்கிக் கணக்குகளை முடக்கின. ஆனால், சுமார் எட்டு மில்லியன் அமெரிக்க டொலர்களை பினோசே வைப்பிலிட்டிருக்கு அமெரிக்காவின் றிக்ஸ் வங்கி மட்டும் பினோசேயுடன் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்த வங்கிக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பிரான்சின் நீதிபதி கார்ஸன் நடவடிக்கைகளை மேற்கொள்ள விருக்கிறார். 1998இல் அகஸ்டஸ் பினோசேயை கைது செய்யும்படியான உத்தரவைப் பிறப்பித்தவரும் இந்த நீதிபதிதான். அவ்வேளை பிரிட்டனுக்கு வந்திருந்த பினோசே அங்கு வைத்துக் கைது செய்யப்பட்டபோதும், அமெரிக்க மற்றும் பிரிட்டன் தலைவர்களின் தலையீட்டால் விடுதலை செய்யப்பட்டார்.

(யே)

## இன்று ஒரு தகவல்

## பேச்சு

"அந்த ஆளுக்குப் பேசத் தெரியாது. அவரிடம் கொஞ்சம் எச்சரிக்கையாக நடந்துகொள்" என்று சொல்வதுண்டு. அப்படியென்றால் என்ன அர்த்தம்?" "அவர் இன்னும் குழந்தையாகவே இருக்கிறார். இன்னும் பேச்சு வரவில்லை" என்றா அர்த்தம்? அப்படி இல்லை. "அவருக்கு நாகரிகமாகப் பேசத் தெரியவில்லை" என்று அர்த்தம்.

பேசுவது என்பது மனிதனால் மட்டுமே இயலக்கூடிய ஒரு காரியம்.அப்படி இருந்தும் அதன் பெருமையை அவன் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று தான் கூறவேண்டும். அதனால் தான் அவன் அளவுக்கு அதிகமாக வார்த்தைகளைக் கொட்டிவிடுகிறான். அதன்பின் அவற்றைத் திருப்பி அள்ளமுடியாமல் மிகவும் சிரமப்படுகிறான். கொட்டிய வார்த்தையை அள்ள முடியுமா?

ஒருத்தரைப் பாரத்து "முட்டாள்" என்று இன்று திட்டிவிடுகிறீர்கள். நாளை மீண்டும் அவரிடம் போய் நேற்று உன்னை முட்டாள் என்று கூறிவிட்டேன். அந்த வார்த்தையைத் திருப்பிக் கொடு வாங்கிக் கொண்டு போகிறேன் என்றா கூற முடியும்? அவன் கோபக்காரனாக இருந்தால் நேற்றே அதை வேறு விதமாகக் கூறியிருப்பான்.

உலகில் எவ்வளவோ ஜீவராசிகள் இருக்கின்றன. அவற்றிற்கு வாயும் உள்ளது. அந்த வாய் எதற்கு உபயோகிக்கப்படும்? சாப்பிடுவதற்காக ஆனால் நமக்கு இருக்கும் வாய சாப்பிடுவதற்காக மட்டுமல்ல பேசுவதற்காகவும் தான். வாய் இருந்தாலும் கூட அது வாயில்லா ஜீவன் தான். ஒரு பையனைப் பார்த்து அது வாய் உள்ள பிள்ளை பிழைத்துக்கொள்ளும் என்றால் மற்றப் பையன்களுக்கெல்லாம் வாயே இல்லை என்றா அர்த்தம்? அப்படியில்லை அந்தப் பையன் கொஞ்சம் கெட்டிக்காரத்தனமாகப் பேசுவான் என்று அர்த்தம்.

சரி விடயத்திற்கு வருவோம். எப்படிப் பேச வேண்டும்? இது தான் இன்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியது. இதற்கு எட்டு விதமான குறிப்புக்களை நமது பெரியவர்கள் சொல்லியிருக்கின்றனர். பேச்சுக்கு எட்டுஅங்கங்கள் உண்டென்று அவர்கள் கூறுகின்றனர்.

அவை என்னென்ன? வரிசையாகச் சொல்கிறேன் கேளுங்கள். உண்மை, நன்மை, அன்பு, நிதானம்,இனிமை, ஆழம், சமயமறிதல்,சபையறிதல் இந்த எட்டுத் தன்மையும் பேச்சில் இருக்க வேண்டுமாம். இவற்றை கொஞ்சம் விபரமாக சிலபேர் போர்ட்டில் எழுதி வைத்திருப்பார்கள். நீங்கள் கூட சில இடங்களில் இதைப் பார்த்திருக்கலாம்.

1. உண்மையைப் பேசுக 2. நன்மையே பேசுக 3. அன்பாகபபேசுக 4.நிதானமாகப் பேசுக 5. இனிமையாகப் பேசுக 6.ஆழமுடையதாகப் பேசுக 7. சமயமறிந்து பேசுக 8. சபையறிந்து பேசுக.

இந்த எட்டு அம்சமும் சரியாகப் பொருந்தி இருந்தால் தான் அது பேச்சு. பேசுவதெல்லாம் பேச்சாகி விடாது. பேச்சு ஒரு சிறந்த கலை. எல்லாவற்றையும் விட பேசாமல் இருந்து பழக வேண்டும் அது மிக முக்கியம. உண்மையைப் பேச வேண்டும் சத்தியத்திற்கு மதிப்புக்கொடுத்தவர்களைத் தான் சரித்திரம் மதிக்கும். உண்மை பேசினால்மட்டும்போதாது அந்த உண்மையில் நன்மை கலந்திருக்க வேண்டும்.

ஒரு கொலைகாரனுக்கு பயந்து கொண்டு ஒருவன் உங்கள் வீட்டுக்குள் ஒளிந்திருக்கிறான். அந்த முரட்டு ஆசாமி கையில் அரிவாளுடன் வந்து "அவன் இங்கே வந்தானா?"என்று உங்களிடம் விசாரிக்கிறான். "உண்மை தான் உயர்வு தரும்" என்று நினைத்துக்கொண்டு "ஆம் ! உள்ளே தான் இருக்கிறான் அடுப்படியில் உட்கார்ந்திருக்கிறான். போய் பிடித்துக் கொள்ளுங்கள்" என்றா சொல்வீர்கள். அது நன்மையில்லாத உண்மை. அதனால் பிரயோசனமிலலை. அதேபோல உங்க்ள் பேச்சில் அன்பு இருக்க வேண்டும. நிதானம் இருக்க வேண்டும். இனிமை இருக்க வேண்டும். சிந்தித்துப் பேச வேண்டும்.

சமயமறிந்து பேசுவதும் முக்கியம். அதைப்பற்றி நமக்கு வேறு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. எந்த நேரத்தில் யாரிடம் என்ன பேசினால் காரியம நடக்கும் என்பது நமக்கு நன்கு தெரியும். அது கைவந்த கலை. அவையறிந்து பேசும் திறமை. பேச்சாளர்களுக்கு மிக அவசியம். அது இல்லாவிட்டால் நிலமை மோசமாகி விடும்.

ஒரு பேச்சாளர் மிகவும மும்முரமாகப் பேசிக் கொண்டே இருந்தார். நீண்ட நேரம் நிறுத்தாமல் பேசிக்கொண்டே இருந்தார். சபையில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக எழுந்து போய்க் கொண்டிருந்தார்கள். கடைசியில் இரண்டே பேர் தான் அக்கறையோடு பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். மேடையில் இருந்தவர் அவர்களைப் பார்த்துச் சொன்னார் "எனக்கு கூட்டம் முக்கியமில்லை. எவ்வளவு பேர் என பேச்சைக் கேட்கின்றார்கள் என்பதும் முக்கியமில்லை. நீங்கள் இரண்டு பேராவது ஊக்கமாக என்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள். அது போதும் உங்களுக்காகவே நான் பேசிக் கொண்டிருக்கிறேன்." என்றார்.

இதைக் கேட்டதும் உட்கார்ந்த இரண்டு பேரில் ஒருவர் எழுந்து "அப்படி இல்லை. நாங்கள் இரண்டு பேரும் பேசி முடிந்ததும் தொடர்ந்து பேச வேண்டிய ஆட்கள். அதற்காகத் தான் உட்கார்ந்திருக்கிறோம். சீக்கிரம் முடியுங்கள்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

# ஒரே நாளில் அ.அட்டை பெறும் நடைமுறையை இரத்துச் செய்ய முடிவு

(கொழும்பு)

ஒரே நாளில் தேசிய அடையாள அட்டையையோ அல்லது கடவுச்சீட்டையோ பெறும் முறையானது நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக பாராதூரமான பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதால் அந்த முறையை இரத்துச் செய்வதற்கு தமது அமைச்சு தீர்மானித்துள்ளதாக மக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

போலி அடையாள அட்டைகளின் பயன்பாடு நாட்டில் தற்போது அதிகரித்துள்ளமை குறித்து ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஒரே நாளில் அடையாள அட்டைகளையோ அல்லது கடவுச் சீட்டுக்களையோ வழங்கும் நடைமுறை இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டிலும் அமுல்படுத்தப்படுவதில்லை.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் மூலம் ஒரே தினத்தில் அடையாள அட்டைகள் மற்றும் கடவுச்சீட்டுக்கள் என்பன வற்றை வழங்கும் போது திருப்திகரமான முறையில் விண்ணப்பங்களை ஆராய்ந்து விசாரணைகளை நடத்த முடியாத நிலை ஏற்படுகின்றது.

இதனால்,ஆட்பதிவுத் திணைக்களத்தில் உள்ள சில அதிகாரிகள் முறைகேடான விதத்தில் பணத்தைப் பெற்றுக் கொண்டு அடையாள அட்டைகளை வழங்க முற்படுகின்றார்கள்.

இவ்வாறு முறைகேடான விதத்தில் அடையாள அட்டைகளைப் பெறும் நபர்கள் போலியான தகவல்களை வழங்கி போலி அடையாள அட்டைகளைப் பெறுகின்றார்கள்.

குறிபபாக வன்செயல்களில் அதாவது பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவோர்களே இவ்வாறு போலி அடையான அட்டைகளைப் பயன்படுத்துகின்றார்கள்.

இதேபோன்று நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட நபர்கள் தண்டனையை அனுபவிக்காமல் நாட்டைவிட்டு தப்பிச் செல்வதற்கு ஒரே நாளில் வழங்கப்படும் கடவுச்சீட்டு துணைபுரிகின்றது என்றார்.


(உ-61,10)

# கொரியா சென்ற குடாநாட்டு வீரர்கள் வெற்றிவாகை சூடினர்

(யாழ்ப்பாணம்)

மதங்களுக்கிடையிலான சர்வதேச சமாதான அமைப்பு 22 வயதுக்குட்பட்ட ஆண்,பெண் இருபாலாருக்குமான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியை தென் கொரியாவில் நடாத்தியிருந்தது.

70 நாடுகள் பங்குகொண்ட இவ்விளையாட்டுப் போட்டி இம் மாதம் 20 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெற்றது.



இப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து எம். சஞ்ஜீவ், எஸ்.கமலமோகன், தயாளினி ஆகியோர் பங்குபற்றினர்.

இவர்களில் சென்பற்றிக்ஸ் பாடசாலையின் பழைய மாணவனான எம். சஞ்ஜீவ் 110 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவனான எஸ். கமலமோகன் உயரம் பாய்தல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவியும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக வீராங்கனையுமான செ. தயாளினி முப்பாய்ச்சல் போட்டியில் பங்குபற்றி தாய் மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

யாழ். பிரதேச செயலக விளையாட்டு அலுவலரும் பயிற்றுநருமான ரமணன் இவர்களை தென்கொரியாவிற்கு அழைத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-19,5)

## இராசி பலன்

**29.07.2004**
**(ஆடி 14, வியாழக்கிழமை)**
**துவாதசி காலை.7.32மணி வரை**
**திரயோதசி பின்னிரவு. 5.06 மணி வரை**
**மூலம் முன்னிரவு. 7.46மணிவரை**
**இராகுகாலம் 1.33-3.03 மணி வரை**
**சுபநேரம் 7.33-9.03 மணிவரை**
**பிரதோச விரதம்**

**மேடம்**
சரீரப் பிரயாசை, எதிர்பாரதசெலவு, பிரயாணம், காரியதாமதம்.

**இடபம்**
மனக்கவலை, பொருள் விரயம், முழங்கால் வலி, முயற்சி தடங்கல்.

**மிதுனம்**
தேகசௌக்கியம், கீர்த்தி, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை.

**கடகம்**
பிறர் உதவி, மனமகிழ்ச்சி, சுப்நிகழ்வு, பகைவர் நேசம்.

**சிங்கம்**
பணத்தட்டுப்பாடு, காரியதாமதம், அஜீரண ரோகம், கௌரவக் குறைவு.

**கன்னி**
தனவிரயம், தன்னம்பிக்கைக்குறைவு, காரியதாமதம், வியாபார சிந்தை.

**துலாம்**
மாதர் நட்பு, மனோ தைரியம், நற்கீர்த்தி, காரிய அனுகூலம்.

**விருச்சிகம்**
போசனக் குறைவு, மனோசங்கடம், அதிக செலவு, முயற்சி தாமதம்.

**தனுசு**
வெகுமானம், சயனசுகம், கௌரவமான நிலை, புதிய முயற்சி.

**மகரம்**
சோம்பல் நிலை, பிரயாணம், மனஸ்தாபம், காரியதாமதம்.

**கும்பம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, நண்பர்கள் சந்திப்பு, போசனசுகம்.

**மீனம்**
இஷ்டசித்தி, நன்கொடை, கௌரவமான நிலை, மேன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# அமெரிக்க அரசின் ஆதரவுடன் குற்றச் செயல்கள் புலனாய்வு

(கொழும்பு)

குற்றச்செயல்களை சரியான முறையில் புலனாய்வு செய்வதற்காக அரசாங்கம் அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதாக சட்டவாக்க அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்காவில் உள்ள சட்ட மருத்துவ நிபுணர் குழுவுடன் இலங்கை அரசின் சார்பில் தாம் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகவும்,

இதற்கமைய,அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் குற்றசசெயல்கள் சம்பந்தமான தேவையான தகவல்களை சட்டவாக்க அமைச்சின் ஊடாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

(உ-60,10)

# கட்டணம் செலுத்த கணனிக் கட்டமைப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தும்போது ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக கணனிக் கட்டமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்த இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு கணனிக்கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் மின்கட்டணங்களைச் செலுத்துவது தொடர்பான பாவனையாளர்களின் குற்றச்சாட்டுக்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என மின்சாரசபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்தக கணனிக் கட்டமைப்பு முதலில் மத்திய மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் படிப்படியாக ஒவ்வொரு மாகாணங்களிலும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-60,10)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

தமிழ்மொழியும் இலக்கியமும் I

மணி - 45 நிமிடம்

ஆக்கம் :
திருமதி. த. சுவாமிநாதன் (ஆசிரியை)
ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்.

**எல்லா வினாக்களிற்கும் விடை தருக.**

(01) அவஸ்த்தை என்ற வடமொழிச் சொல்லின் தமிழ்மொழி வடிவம்
1. துன்பம் 2. இன்பம் 3. களங்கம் 4. கொடுமை

(02) நீ + ஐ என்பதைச் சேர்த்து எழுதினால் வரும் வடிவம்
1. என்னை 2. நும்மை 3. உன்னை 4. உம்மை

(03) சீதமதிக்குடைக்கீழ் செம்மையறங்கிடப்ப என்ற தொடரில் வந்துள்ள சீதம் என்பது
1. குளிர்மை 2. சந்திரவட்ட 3. அரசகுடை 4. வெப்பம்

(04) வேரித்தாரான் விருந்தெதிர் கொண்டனன் என்பதில் உள்ள வேரி என்பது உணர்த்தும் ஒத்த வடிவம்
1. பூமாலை 2. நீர் 3. தேன் 4. மலர்

(05) அமுதம் உண்ண உண்ண தெவிட்டியது. தெவிட்டுதல் என்பதன் எதிர்ப்பதம்
1. சலித்தல் 2. வெறுத்தல் 3. விரும்புதல் 4. பருகுதல்

(06) பின்வருவனவற்றுள் இறந்தகால இடை நிலைகளாக அமைவது
1. கின்று, கிறு 2. ப்,வ் 3. ந், ந 4. த்,ட்,ற்,ன்,இன்

(07) பின்வருவனவற்றுள் மருஉ வழக்காக அமைந்த சொல்
1. அருமருந்த பிள்ளை 2. துஞ்சினார்
3. கொல்லைக்குப் போகிறேன் 4. நச்சுப் பாம்பு

(08) தமிழில் உள்ள எழுத்துக்களுள் உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
1. 30 2. 18 3. 247 4. 216

(09) பின்வருவனவற்றுள் உரிச்சொற்றொடராக வருவது
1. விளைமீன் 2. வாளைமீன் 3. விண்மீன் 4. உறுமீன்

(10) ப, மார் எனும் விகுதிகள் .................... காட்டும்
1. ஆண்பால் 2. பலர்பால் 3. பெண்பால் 4. ஒன்றன்பால்

**புள்ளிக் கோடிட்ட பகுதிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

(11) "ஆரடி கள்ளி நீதான் அடாத இவ்விருளிற்றானே" என்ற பாடல் உணர்த்தும் சுவை ....................
1. கோபம் 2. மகிழ்ச்சி 3. வியப்பு 4. பயம்

(12) கிடைக்காத பொருளிற்காக மீண்டும் மீண்டும் ஈடுபடுவதை .............. இருக்கும்
1. ஆற்றில் கரைத்த புளிபோல
2. முயற் கொம்புக்கு ஆசைப்பட்டது போல
3. கல்லில் நார் உரிப்பது போல
4. கிணறுவெட்ட பூதம் வெளிப்பட்டது போல

(13) கண்டான் என்ற சொல்லின் பகுதியாக அமைவது
1. காண் 2. கண் 3. ஆன் 4. ட்

(14) நடந்தானைக் கண்டேன் என்பது
1. குறிப்பு வினை 2. வினையாலணையும் பெயர்
3. எதிர்மறை வினை 4. வினையெச்சம்

(15) "க்" என்ற எழுத்துக்கு இனவெழுத்தாக .................. அமையும்
1. ந் 2. ம் 3. ங் 4. ட்

(16) ஜனசக்தி என்ற சொல் ................... ஆகும்
1. வடமொழிச் சொல் 2. சிங்கள மொழிச் சொல்
3. மராட்டி மொழி 4. தமிழ் மொழி

(17) ஆலயந் தொழுவது சாலவும் நன்று. இதில் வந்துள்ள உரிச் சொல் உணர்த்தும் பொருள்
1. அன்பு 2. விருப்பம் 3. மிகவும் 4. சிறப்பு

(18) பின்வருவனவற்றில் இலக்கணப்போலியாக வந்த சொல்
1. வாயில் 2. கால் கழுவினார்
3. அருமருந்த பிள்ளை 4. நன்காடு

(19) பாஞ்சாலி சபதத்திலே திரௌபதியை கண்டு "ஆடி விலைப்பட்ட தாதி" என இழித்துப் பேசியவன் .................. ஆவான்.
1. சகுனி 2. தேர்ப் பாகன் 3. துரியோதனன் 4. துச்சாதனன்

(20) "தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கத்தாங்க" என்பது சித்தரிக்கும் காட்சி ............ நிலத்திற்குரியது
1. குறிஞ்சி 2. நெய்தல் 3. மருதம் 4. முல்லை

**பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களிற்கு விடை தருக.**

**"மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்கான் ~ மின்னிறத்துச்
செய்ய தான் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கை வாய்ப் போவதே போன்று"**

(21) இச்செய்யுளில் கையாளப்பட்ட அணி
1. உவமையணி 2. தற்குறிப்பேற்றம்
3. உயர்வுநவிற்சி 4. உருவகம்

(22) செங்கமலம் என்பதை பிரித்தால் வருவது
1. செம் + கமலம் 2. செங்கை + கமலம்
3. செம்மை + கமலம் 4. செந் + தாமரை

(23) மடப்பாவை என்பது குறிப்பது
1. சீதையை 2. தமயந்தியை
3. திரௌபதியை 4. கண்ணகியை

(24) பொய்கை என்பது குறிக்கும் ஒத்த பதம்
1. நீர் 2. கடல் 3. ஆறு 4. குளம்

(25) இப்பாடலில் வந்துள்ள பெயரடை மொழி
1. போவதுபோன்று
2. பூத்த மண்டபம்
3. மடப்பாவை
4. செங்கமலம்

**பின்வரும் வினாக்களிற்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

(26) சொர்ப்பனம் என்பதன் திருத்தமான வடிவம்
1. சொற்பனம் 2. சொப்பனம்
3. சொற்பணம் 4. சொப்பணம்

(27) சுயமரியாதையைக் காத்தல் வேண்டும் என்பதை விளக்க பொருத்தமான பழமொழி
1. எலி வளையானாலும் தனி வளை வேண்டும்
2. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு
3. அழையில் ஆடியே அம்பலத்தில் ஆட வேண்டும்
4. அழையா விருந்துக்கு நுழையாதே

(28) ஆபத்துக்கு பாவம் இல்லை என்னும் பழமொழியின் கருத்து
1. பசு முதலிய விலங்குகளுக்கு பாவம் உண்டாவதில்லை.
2. ஆபத்துக் காலத்தில் என்ன செய்தாலும் பாவம் வந்தடையாது.
3. எந்த விதிக்கும் புறநடைகள் உண்டு.
4. நெருக்கடி வேளையில் விலக்கான காரியத்தை செய்வது குற்றமில்லை.

(29) சிறந்த விமர்சகர்கள் எந்த நூலையும்............... நடுவு நிலமையாக நின்றே விமர்சிப்பர்
1. ஆய்ந்தோய்ந்து
2. கண்ணுங் கருத்துமாய்
3. விருப்பு வெறுப்பின்றி
4. நயத்தாலும் பயத்தாலும்

(30) கச்சை கட்டுதல் என்ற இலக்கணத் தொடரின் ஒத்த கருத்து
1. கை காட்டுதல்
2. கங்கணங்கட்டுதல்
3. தட்டிக்கொடுத்தல்
4. பம்பரமாட்டுதல்

(31) அறிஞர் அவை என்பது போல, படை வீரர்
1. குழு 2. அணி 3. அவை 4. கூட்டம்

(32) கழுதை மலம் விட்டை என்பது போல, ஒட்டகம், யானை என்பவற்றின் மலம்
1. விட்டை 2. சாணம் 3. இலத்தி 4. பிழுக்கை

(33) அத்து அற்று என்பன
1. விகுதி உருபுகள்
2. இடைநிலை உருபுகள்
3. பகுதி உருபுகள்
4. சாரியை உருபுகள்

(34) "ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்" இவ்வாக்கியத்தின் எழுவாய்
1. ஏழை 2. கண்ணீர் 3. வாளை 4. கூரிய

(35) காந்தனுக்கு பிரதேச செயலகம் சென்றதால் அனுகூலம் ஏற்பட்டது. அனுகூலம் என்பதன் எதிர்ப்பதம்
1. நிரதிகூலம் 2. நட்டம் 3. கைக்கூலி 4. பிரதிகூலம்

(36) பத்து ஆண்டுகள் கொண்ட காலப்பிரிவு
1. தசாப்தம் 2. சதாப்தம் 3. நூற்றாண்டு 4. தசாவம்

(37) கால் கோள் விழா என்பது
1. புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடத்தினை திறந்து வைக்கும் விழா
2. புதிதாகக் கட்டப்பட்ட வீட்டில் குடிபுகும் விழா
3. யாதாயினும் ஒன்றைத் தொடங்குவதற்கான விழா
4. நூற்றாண்டுகள் முடிவுற்றதும் எடுக்கும் விழா

(38) தலையின் இழிந்த மயிர். இது குறிக்கும் வேற்றுமை
1. 2ம் வேற்றுமை
2. 3ம் வேற்றுமை
3. 7ம் வேற்றுமை
4. 5ம் வேற்றுமை

(39) பின்வருவனவற்றுள் பொது மொழியாக அமையாத சொல்
1. பழக்கறி 2. பலகை 3. வேங்கை 4. நாதம்

(40) **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற அமைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று உருவாகும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

(அ) இறப்பர், கோப்பி போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரப் பயிர்களுக்கு பங்கசு மூலம் அதிக சேதங்கள் ஏற்படுகின்றன.
(ஆ) பங்கசுவும் ஒரு நுண்ணுயிர் வகையாகும்.
(இ) பல்வேறு நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் "பென்சீலின்" எனும் மருந்து "பென்சீலியம்" எனும் பங்கசுவினால் உற்பத்தியாக் கப்படுகிறது.
(ஈ) இலங்கையில் 1869இல் கோப்பி இலைகளில் தொற்றிய ஒருவகை பங்கசுவினால் கோப்பிச் செய்கை முற்றாக அழிந்தது.
(உ) ஆகவே, பங்கசுக்கள் மனிதனுக்கு நன்மையையும், தீமையையும் செய்கின்றன.
1. அ, ஆ, இ, ஈ, உ
2. ஆ, அ, ஈ, இ, உ
3. இ, ஆ, அ, ஈ, உ
4. ஈ, ஆ, இ, அ, உ

**(40x 1 = 40 புள்ளிகள்)**

**நாளை தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி -I இற்கான விடையுடன், பகுதி -II இற்கான வினாக்களும் வெளிவரும்.**

# சமூக, கலாசாரப் பிறழ்வுக்கு காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே!

விவாதஅரங்கு - 4

வாதம் - 4

சமூக கலாசாரப் பிறழ்வுக்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே! என்ற விவாத அரங்கிற்கு இளைஞர்களே காரணம் எனத் தன் வாதத்தை முன் வைக்கிறார் நீர்வையூரான்

ஆக்கம் : நீர்வையூரான்

மனித வாழ்வின் உயர் விழுமியங்கள் மறக்கடிக்கப்பட்டு அராஜக செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுக் கொண்டிருக்கின்ற அபாயகரமான ஒரு கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

கொலை, பாலியல் வன்முறைகள், களவு என்பது தினம் தினம் மனித மாண்பு மறைந்து கொண்டுபோகிறது. கலாசாரப் பிறழ்வுகள் சர்வ சாதாரணமாக இடம்பெறுகின்றன. இத்தகைய கலாசார பிறழ்வுகளிற்கு பெரும்பாலும் காரணகர்த்தாக்களாக அமைபவர்கள் தற்கால இளைஞர்கள் என்று கூறினால் மிகையாகாது.

சங்க காலம் தொடக்கம் இன்றைய 21ம் நூற்றாண்டு வரை உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், காவியங்கள் எல்லாம் ஆணகளை, உதாரண புருஷர்களாகவும், அவர்கள் செய்யும் காரியங்கள் எல்லாம் ஏதோ ஒருவகையில் நியாயப்படுத்தப் படடும் வருவதை அறியக் கூடியதாக உள்ளது.

பாரதம், இராமாயணம் போன்ற சிறந்த காவியங்களில் கூட ஆண்களுக்கென சமூக ஒழுக்கம், நியதிகள், வரையறைகள் வகுக்கப்பட்டு வந்ததை அறியக்கூடியதாக உள்ளது.

பாரதத்தில் ஐந்து ஆண்களுக்கு ஒரு மனைவி என்ற நிலையும், தசரதன் 63 மனைவியரை வைத்திருந்ததாகவும் அறிய முடிகிறது. இராமன் ஏன் பத்தினி விரதம் உடையவனாக சித்தரிக்கப்பட்ட போதும் கூட மனைவியை தீக்குளிக்கச் செய்த செய்தியும், ஆண்கள் எதுவும் செய்யலாம் கேட்பாரில்லை என்ற ஒரு மனோபாவத்தை ஏற்படுத்தியிருப்பதையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும்.

அந்த மரபு ரீதியான வளர்ச்சியின் தொடர்ச்சியே இன்றைய கலாசாரச் சீரழிவுகள்.

'சேறு கண்ட இடத்தில் மிதிப்பான்; தண்ணீர் கண்ட இடத்தில் கழுவுவான்' என்ற மனப்போக்கும் ஆண்கள் எதுவும் செய்யலாம் என்ற ஒரு நிலைப்பாட்டை ஆண்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

தந்தையை, தாயை, குடும்பத்தவரை மகன் கொல்லும் நிகழ்வுகள், மனைவியைச் சித்திரவதை செய்யும் கணவன்மார்கள் இவ்வாறு கலாசார விழுமியங்கள், ஆண்களால் சீரழிக்கப்படுவதை சர்வ சாதாரணமாக இன்று அவதானிக்க முடிகிறது.

கோஷ்டி மோதல்கள், கள்ளச்சாராய விற்பனை, விவாகரத்துக்கள் போன்ற மனித விழுமியங்களுக்கு மாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் ஆண்கள் தான் என்பதனை மறக்க முடியாது.

குடும்பத் தலைவனாக விளங்கும் ஆண்கள் செய்யும் தவறுகளால் எத்தனையோ குடும்பங்கள் சிதறிச் சின்னாபின்னமாகி வருவதை தினசரி காணக் கூடியதாக உள்ளது. கட்டுக் கோப்பான மனித நெறிமுறைகளுக்கு அமைய நடகக வேண்டிய ஆண்கள் அதாவது இளைஞர்கள் ஒழுக்கம் கெட்டு மதுபாவனை, பல பெண்களை நாடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதனால் எத்தனையோ குடுமபங்கள் சிதறுண்டுபோவதும், பெண்கள் தினம் தினம் கண்ணீரும் கம்பலையுமாக அவல வாழ்வு வாழ்ந்து வருவதையும் உற்று நோக்க முடிகிறது.

தம் பொருளாதார வளத்திற்காக, உல்லாச வாழ்க்கைக்காக ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளிற்கு செல்லும் இளைஞர்கள் ஆடம்பரம், உல்லாச வாழ்வு என்ற மாயையில் மயங்கி சிக்கிச் சீரழிவதும் கூட இன்றைய கலாசார சீரழிவிற்கு அடிப்படையான காரணமாக அமைவதை மறுப்பதற்கு இல்லை.

உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய ஆண்கள் அதாவது குடும்பத் தலைவர்கள், உழைக்காமல் சோமபியிருப்பதால் எத்தனையோ குடும்பப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கென வேலை வாய்பைநாடிச் செல்வதும், அங்கு பல்வேறு இன்னல் களுக்குள்ளாக்கப்படுவதும் உற்று நோக்க வேண்டிய அம்சங்கள்.

அவ்வாறு கஷ்டப்பட்டு குடும்பத்திற்காக உழைத்து மனைவி அனுப்பும் பணத்தில் சொகுசு வாழ்க்கை நடாத்தும் ஆண்கள், அவர்கள் செய்யும் லீலைகள் எல்லாம் தினசரி நடக்கும் அவல வாழ்வின் பிரதிபலிப்புகளாகவே விளங்குகின்றன.

வெளிநாட்டு வாழ்க்கை, தென்னிந்தியத் திரைப்படங்களின் தாராள இறக்குமதி, வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படுகின்ற பல தரப்பட்ட சினிமா நாடாக்கள் போன்றவற்றினுடைய பாதிப்புக்களும் இன்றைய கலாசார சீரழிவிற்குக் காரணமாக அமைவதை அறிய முடிகிறது.

ஒட்டுமொத்தமாக நோக்கின் பண்பாடுகளைப் பிரதிபலிப்பவளாகப் பெண்கள விளங்க வேண்டும், உயர் விழுமியங்களைப் பெண்கள் போற்ற வேண்டும், பெண் சமுதாயம் சீர் குலைந்தால் மனித இனமே சீர்குலையும், உயர் பண்புகளை இழக்கும் என்பன போன்ற பெண்கள் தரப்பிலான வாதங்கள் முன்வைக்கப் பட்டாலும் கூட குடும்பத்தின் தலைவனாக, எதிர்காலத்திற்கு வித்திடும் ஆண்கள் ஒழுக்கம் தவறினால் குடும்பம் உட்பட நாடே அவல நிலைக்குள்ளாகும்.

ஆக, மொத்தத்தில் இன்றைய கலாசாரப் பிறழ்விற்கு இளம் சமுதாயமாகத திகழும், ஆண்கள், பெண்கள் ஆகிய இரு தரப்பினரும் காலாக அமைகிறார்கள் என்று கூறப்பட்டாலும் கூட நடைபெற்று வருகின்ற சம்பவங்களின் எண்ணிகையில் நோக்கின் இன்றைய கலாசாரப் பிறழ்விற்குக் கூடுதலான காரணம் ஆண்களே என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ௸

## மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு எதிராக 22 மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)

மதமாற்றத்தைத் தடுக்கும் வகையில் பாராளுமன்றத்தில் சமர்பபிக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையானது அரசியல் யாப்புச் சட்டத்திற்கு ஏற்புடையது அல்ல என்று தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் 22 விசேட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்களின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார். ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ஓமல்பே சோபித தேரர் கடந்த 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையை முன்மொழிந்திருந்தார்.

இது அரசியலமைப்பின் அடிப்படை உரிமையை மீறுவதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். இந்த பிரேரணை நிறை வேற்றப பட வேண்டுமானால், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை சர்வஜன வாக் கெடுப்பையும் நடத்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மனுதாரர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இந்த மனுக்களை கிறிஸ்தவ மற்றும் இந்துமத அமைப்புக்களும், சமூக அமைப்புக்களும் தனிநபர்களும் தாக்கல் செய்துள்ளனர். (உ-121)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ கணேச முன்பளளி வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் ஆசிரியர் க.கணேசராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக, வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர் அஞ்சலிதேவி, சாந்தசீலன், வலி. கிழக்கு ப.நோ. கூ.ச. நீர்வேலி தலைவர் அ.க. த.கிருஷ்ணராசா, த.மலர்மகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)



யாழ்.மாநகர சபையின் பாலர் பாடசாலை விளையாட்டு விழா பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

-அலுவலகச் செய்தியாளர்-

க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

## விவாத அரங்கு -4

விடயம்

சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!


நடுவர் : சிவ.சரவணபவன் (சிற்பி)
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# உலகின் மிகப் பெரிய டெனிஸ் சுற்றுப்போட்டியில் ஷரபோவா

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி சீனாவில் முதன் முதலாக ஆரம்பிக்கப்படவிருப்பதும் உலகின் மிகப்பெரியது என்று கணிக்கப்பட்டுள்ளதுமான சீன பகிரங்க டெனிஸ் போட்டிகளின் ஆரம்பப் போட்டியில் விம்பிள்டன் சம்பியனான மரியா ஷரபோவாவும் அவரது எதிராளியான செரீனா வில்லியம்ஸும் மோதவுள்ளனர்.



AFP/FILE

ஆறு லட்சம் பார்வையாளர்கள் நேரடியாக இப்போட்டிகளைக் கண்டு களிக்கவுள்ளதுடன், 700 மில்லியன் பார்வையாளர்கள் தொலைக் காட்சி மூலமாக இப்போட்டிகளைக் கண்டு களிப்பர் என இப்போட்டிகளின் இயக்குநர் லிங்கன் லெனன்சியோ அறிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டு அமெரிக்க பகிரங்கச் சம்பியன் மரட்சபின் உள்ளிட்ட பல முன்னணி வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ள இப் போட்டிகளில் ஆண்; பெண் மற்றும் இளையோர் பிரிவுகளிலும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிக்காக பெய்ஜிங்கின் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ள புதிய டெனிஸ் வளாகத்தில் சுமார் 15 கடும் நில கோட்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே)

# லண்டன் கிராண்ட் பிரிக்ஸ் மேரியன் ஜோன்ஸ் தவிர்ப்பு

இவ்வார இறுதியில் லண்டனில் இடம்பெறவுள்ள நோர்விச் லண்டன் கிராண்ட் பிரிக்ஸ் தடகளப் போட்டிகளில் மேரியன் ஜோன்ஸ் பங்கு பற்றமாட்டார் என்று அவரது முகாமைத்துவம் அறிவித்துள்ளது.



AFP PHOTO

தனது ஒரே நோக்கம் எதிர்வரும் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வெல்வதுதான் என்று ஜோன்ஸ் அறிவித்துள்ளார். ஆயினும் ஒகஸ்ட் 6ஆம்திகதி சூரிச்சிலும் ஒகஸ்ட் 8ஆம் திகதி மூனிச்சிலும் அவர் 100 மீற்றர் மற்றும் நீளம் பாய்தல் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நீளம்பாய்தல் போட்டியில் மட்டும் எதெனஸில் பங்கு பற்றவிருக்கும் ஜோன்ஸ், சிட்னியில் ஊக்கமருந்து பாவித்ததாக அவரது முந்நாள் கணவர் தெரிவித்த குற்றச் சாட்டுக்கெதிராக ஜோன்ஸ் சட்ட நடிக்கையில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே)

# உதைபந்திலிருந்து ஓய்வு பெறும் பிரான்ஸின் லில்லியன் தூரம்

கடந்த பத்து வருட காலமாக பிரான்ஸ் உதைபந்து அணியின் தூண்களில் ஒருவராக விளங்கி 103 போட்டிகளில் பங்கெடுத்த லில்லியன்துரம் உதைபந்து வாழ்விலிருந்து ஓய்வு பெறுகிறார்.

32 வயதான லில்லியன் துரம் பிரான்ஸ் அணி 2000ஆம் ஆண்டு யூரோக் கிண்ணத்தை வெல்லவும், 1998 உலகக் கிண்ணத்தை வெல்லவும் காலாகவும் விளங்கினார். 1998இல் குரோஷியாவுக்கெதிரான அரையிறுதி ஆட்டத்தில் இரண்டு கோல்களைப் போட்டு பிரான்ஸ் அணி 2-1 எனும் கோல்கள் அடிப்படையில் வெற்றி பெறக் காரணமாக விளங்கினார்.



AFP PHOTO

10 வருட கால உதைபந்தாட்ட வாழ்வில் அவர் போட்ட இரண்டு முக்கிய கோல்கள் இவையேயாகும். பிரான்ஸ் அணியின் தலைவர்களான மார்ஷல் டிசாய்லி, டிடியர் டிஸ்சாம்ப் ஆகியோருக்கடுத்தபடியாக 100 போட்டிகளுக்கு அதிகமாக விளையாடிய 3வது வீரர் எனும் பெருமையை துரம் பெறுகிறார். 1994இல் செக் குடியரசுக்கெதிரான ஆட்டமே அவரது முதல் சர்வதேச ஆட்டமாகும். (யே)

# ரி-மொபைல் அணி முகாமையாளரின் கூற்றால் உல்ரிச கடும் சினம்

1997ஆம் ஆண்டு ரூர்டி பிரான்ஸ் சைக்கிள் ஓட்டத் தொடரின் சம்பியனும் ஐந்து தடவைகள் அப்போட்டித் தொடரில் இரண்டாவது இடத்தைப் பிடித்தவரும், ஜேர்மனியின் ரி-மொபைல் அணியின் வீரருமான ஜான் உல்ரிச், தனது முகாமையாளரின் கூற்றால் கடும் சினம் அடைந்துள்ளார்.



AFP PHOTO

இவ் வருடப் போட்டித் தொடரில் முதல் மூன்றில் ஒரு இடத்தைக் கூட கைப்பற்றாத உல்ரிச் ''மலைகளின் அரசன்'' பட்டத்தை வென்றிருந்தார். ஒரு கட்டத்தில் போட்டித் தொடரில் ஆறாவது தடவையும் நாயகன் விருதை வென்ற ஆம்ஸ் ரோங்கிற்குச் சவாலாக விளங்கி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது பெறுபேறுகள் குறித்து அணி முகாமையாளர் வோல்டர் கோட்புரூட் கருத்து வெளியிடுகையில், "ஆம்ஸ்ரோங்கிற்கு வாழ்க்கை என்பது சைக்கிள் ஓட்டம் தான்" உல்ரிச் வாழ்வதற்காகச் சைக்கிள் ஓடுகிறார்'' என்று குறிப்பிட்டார்.

வருடத்தில் இரண்டு தடவை ரெலிபோனில் பேசும் முகாமையாளருக்கு சைக்கிள் ஓட்டம்பற்றி அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை! ஆனால் அடுத்த வாரம் ஹம்பேர்க்கில் நடைபெறவுள்ள போட்டிக்கு முன்னதாக அவரை நாலு வார்த்தை கேட்கவுள்ளேன். ஒழுங்கான பதில் கிடைக்கா விட்டால் நடப்பதே வேறு! என்று சீறியிருக்கிறார் உல்ரிச். (யே)

## கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ண இறுதிப்போட்டி

மேற்படி விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்டு வந்த கிரிக்கெற் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப.1.00 மணிக்கு நடை பெறும், இப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி மோதுகின்றது.

முன்னர் தீர்மானித்தபடி கடந்த 11ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை மழை காரணமாக இப்போட்டியை நடாத்த முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது. (யே)

# மைக்டைசன் - டனி வில்லியம்ஸ் சனிக்கிழமை மோதுகின்றனர்

பிரித்தானிய அதிபாரக் குத்துச் சண்டைச் சம்பியன் டனி வில்லியம்ஸ் மற்றும் முந்நாள் உலக அதிபராகக் குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் ஆகியோர் எதிர்வரும் நாளை மறுதினம் சனிக்கிழமை மோதவுள்ளனர்.



சுமார் 17மாத கால இடைவெளியின் பின்னர் மீணடும் உலக குத்துச் சண்டைப் போட்டிகளில கலந்து கொள்ளவுள்ள டைசன் மிக மோசமான நிதி நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறார்.

40 வீதமான உடற் தகுதியுடன் போட்டியிடும் டைசன், டனி வில்லியம்சை வெல்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றபோதும் வில்லியம்சிடமிருந்து அவர் கடும் சவாலை எதிர்கொள்ள நேரிடும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மைக் டைசனைப் பயிற்சிக்குத் தயார்ப்படுத்தும் பிரெடி ரோச் கருத்து வெளியிடுகையில், நடைபெறப்போவது உலகின் மிகப்பெரும் போட்டியாகும். வில்லியம்ஸ் இதை எப்படி எதிர்கொள்வார் என்று பார்க்க நாம் ஆவலாயுள்ளோம் என்றார்.

(யே)

# விளையாட்டுச் செய்திகள்

ATHENS 2004
XXVIII OLYMPICS 13-29 AUGUST

ஒலிம்பிக்கிற்கு இன்னும் 15 தினங்கள்

## எதென்சுக்கு வாருங்கள் பகுதி XI

# எதென்ஸ் ஒலிம்பிக் மைதானங்கள் பெரிஸ்ரேரி குத்துச்சண்டை மண்டபம்

எதென்சுக்கு மேற்கே அற்றிக்கா பிராந்தியத்தில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் பெரிஸ்ரேரி குத்துச் சண்டை மண்டபம் மிகவும் பிரமாண்டமான கட்டட உருவாக்கம் என்று வர்ணிக்கப்படுகிறது.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் குத்துச்சண்டைப் போட்டிகள் இங்கு இடம்பெறவிருக்கின்றன. சுமார் எட்டாயிரத்தி இருநூறு பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள் கொண்ட இந்த உள்ளக மண்டபத்தில் ஓகஸ்ட் 14 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 29 ஆம் திகதி வரை போட்டிகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன. இங்கு பரா ஒலிம்பிக் போட்டிகள் எவையும் இடம் பெறமாட்டாது. 286 போட்டியாளாகள், குத்துச்சண்டையில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் முடிவடைந்த பிற்பாடு பெரிஸ்ரேரி மண்டபத்தின் சில தூண்கள் அகற்றப்பட்டு சிறந்த வெளியரங்கம் உருவாக்கப்பட்டு டெனிஸ் மற்றும் கூடைப்பந்தாட்ட உள்ளக மைதானங்களும் 5 பேர் கொண்ட உதைபந்தாட்ட அணிக்கான மைதானங்களும் இங்கே உருவாக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(யே)

# பாதுகாப்பு வலைப்பின்னலில் உள்ள ஓட்டையை மறைக்க அரசு, ஊடகங்கள் மேல் பாய்கிறது

(கொழும்பு)

அண்மையில் கொட்டாவப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகளால் மிகுந்த அவமானத்திற்கு உள்ளாகியுள்ள பாதுகாப்புத்துறையினர் தமது விசனத்தை ஊடகத்துறையினர் மீது திருப்பியுள்ளதாகத் தொியவருகிறது.

குறிப்பாக, கொட்டாவச் சம்பவத்தில ஈடுபட்ட புலிகளால் வெளியேற்றப்பட்ட கருணா பிாிவினர் புலிகளிடம் தொடர்பு கொண்டு சரணடைந்ததையிட்டு இக்கொலைகள் சம்பந்தமான செய்திகளை கிழக்கினூடாக ஊடக உலகம் அறிந்து கொண்டது.எனினும் இதுபற்றிய தகவலெதையும் அறிந்திராத பொலிஸார் இச்சம்பவத்தை மறுத்ததுடன் அசட்டையீனமாக இருந்து விட்டனர். தொடர்ந்து ஊடகவியலாளர்கள் பொலிஸாருக்குக் கொடுத்த அழுத்தம் காரணமாகவே பொலிஸார் இச்சம்பவத்தையும் சம்பவ இடத்தையும் அடையாளம் கண்டனர்.

இந்நிலையில் இச்சம்பவமானது படைகளின் பாதுகாப்பு வலைப்பின்னலில் பாரிய ஓட்டை இருப்பதை நிரூபித்துள்ளது. குறிப்பாக தங்களது மறைவிடம் ஒன்றையே பாதுகாக்க முடியாத நிலையில் பாதுகாப்புப் படையினர் இருந்தனர் என்பதோடு, தங்களாலேயே கரு ணாவும் அவரது சகாக்களும் பாதுகாக்கப்படுகின்றனர் என்ற உண்மைக்கான சாட்சியங்களை தாமே வெளிப்படுத்திய அவல நிலையையும் அடைந்துள்ளனர்.

இதன் காரணமாக இலங்கை அரசின் செய்தித்துறைத் திணைக்களமே உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டது. தமிழ்நெற்றில் இச்செய்தி முதலாவதாக வெளிவந்தமை குறித்த விடயத்தைப் பொதுபடுத்தியும், இவ்விவகாரத்தை பேச்சுவார்த்தை மற்றும் போர்நிறுத்தம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தியும அறிக்கை வெளியிட்டுள்ளது.

குறிப்பாகத் தங்களால் ஆயுதக் குழுவாகப் பராமரிக்கப்பட்டவர்களால மேற்கொள்ளப்பட்ட இக்கொலைகளை விடுதலைப் புலிகளின் செயற்பாடாகக் காட்ட அது முயல்வதோடு, போர்நிறுத்தம்- பேச்சுவார்த்தை ஆகியவற்றை இவ்விவகாரத்துடன் இணைப்பதன் மூலம் தங்களது இலக்கே தாக்கப் பட்டது என்பதை நிருபித்து நிற்கிறது.

ஆனால் இச்செய்தி எப்ப டித் தமிழ்நெற் இணையத்தளத் திற்கு கிடைக்கப்பெற்றது என்ற ஆச்சரியத்தை இலங்கை வெளிப் படுத்தியுள்ளதானது சிறுபிள்ளைத் தனமான செயலாகவே கருதப்படுகிறது. நிலாவினி உடபட நான்கு தளபதிகள் தப்பிய செய்தி கூட கிழக்கு மாகாணத்திலிருந்தே வெளிப்படுத்தப்பட்டது என்பதோடு, அவர்கள் கொழும்பில் தங்கியி ருந்த பாதுகாப்பிடங்கள், இவ்விவ காரங்களுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகள் ஆகியோரின் விபரங்களையும் தமிழ் ஊடகங்களே முதலில் வெளியிட்டன. எனவே சரணடைந்தவர்கள் வழங்கிய தகவல்களின் மூலம் கொட்டாவவில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிய செய்திகளை கிழககிலங்கை நிருபர்களே முதலில் அறிந்துகொள்வது சாத்தியமானது.

அந்தவகையில் இந்தச் செய்தியானது தமிழ் ஊடகவியலாளர்களாலேயே முதலில் வெளிப்படுத்தப்படும் என்பதே யதார்த்தம். அது போன்றே கிழக்கின் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தேசவிரோதிகளால் மேற்கொள்ளப்படும் கொலைகள் போன்றவற்றையும் கிழக்கிலங்கையிலுள்ள செய்தியாளர்களே முதலில் வெளிக்கொணர்ந்தனர். தொலைபேசிப் பாிவர்த்தனை மூலமாக கிழக்கின் செய்திகளை கிழக்கிலங்கைச் செய்தியாளர்கள் உடனுக்குடன் வழங்கிவருவது கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வரும் ஒரு செயற்பாடே.

இந்நிலையில் இந்த ஒரு விடயம் மாத்திரம் எப்படித் தமிழ்நெற் இணையத்தளத்திற்கு, பொலிஸாருக்குத் தெரிய முன்னர் கிடைக்கப்பெற்றது எனற கேள்வி பர்துகாப்புத் துறையில் மாத்திரமல்ல, தொழில்நுடப பாிவர்த்தனை சம்பந்தமான அறிவிலும் பெரிய ஓட்டை இருபபதையே எடுத்துக் கர்ட்டுகிறது.

போர் நடைபெற்ற காலங்களில் தங்களது முகாம்களும், தளங்களும் தாக்கியழிக்கப்பட்ட செய்திகளையும் புலிகளால் வசப்படுத்தப்பட்ட செய்திகளையும் கூட இவ்வாறான ஊடகங்களின் செய்தியின மூலமே அரசும் சிங்கள ஊடகங்களும், ஏன் பாதுகாப்புத்துறையும் பெற்றுவந்தன என்பதையும் அவை ஏனோ மறந்துவிட்டன. செய்தியூடகங்களின் பணியே செயதியை முந்திக் கொடுப்பதே என்பதை மறந்து இவ்வாறான மலினத்தனமான வேலைகளை அரசு செய்ய முனைவது எந்தவகையிலும் நியாயப்படுத்தக் கூடிய ஒரு செயலல்ல என்பதோடு ஊடகவியலாளர்கள் மீது அழுத்தத்தைக் கொடுக்க முனையும் ஒரு செயலாகும். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் சுதந்திரமாகச் செயற்படும் ஊடகவியலாளர்களை ஒடுக்கவே அரசு முனைகிறது. தான் தீட்டிய திட்டங்கள் எல்லாமே தவிடு பொடியாகிப் போன பரிதவிப்பில் சிறு பிள்ளைத்தனமான காாியங்களில்ஈடுடுவதை முதலில் அரசு நிறுத்த வேண்டும். ஏனெனில் அரசு எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை நிருபிப்பதாகவே கொடடாவ விவகாரம் தொடர்பான அதனது அறிக்கைவெளி வந்துள்ளது.

**நன்றி: புதினம்**

## கண்ணிவெடியகற்றும் எதியோப்பியக் குழு வவு.வந்தடைந்தது

(வவுனியா)

யுத்த காலத்தின் போது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புதைக்கப் பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக இலங்கை வந்துள்ள எதியோப்பிய நாட்டு கண்ணிவெடியகற்றும் குழுவினர் வவுனியா மாவட்ட அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் குழுவில் எதியோப்பிய நாட்டின் கண்ணிவெடியகற்றும் குழுவுகுப் பொறுப்பான அதிகாரியான யம்புவியொன்குவா உட்பட 5 பேர் அடங்கியுள்ளனர்.

எதியோப்பிய நாட்டு கண்ணி வெடி அகற்றும் குழுவைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 782 பேர் தற்போது உலக நாடுகளில் பணியாற்றுகின்றனர். இவர்களில் 74 ஆயிரத்து 577 ஆண்களும் 56 ஆயிரத்து 205 பெண்களும் அடங்குகின்றனர்.

அததுடன்இக்குழுவினரால் உலகளாவிய ரீதியில் 11 மில்லியன் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதாகவும இந்தப் பணியில் ஈடுபட்டபோது 19பேர் உயிரிழந்ததுடன் 87 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-8,10)

## மாகாண சபைச் சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

பொதுமக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கும் பொருட்டு மாகாணசபைச் சட்டம் திருத்தப் படும் என அகில இலங்கை பிரதேச சபைத் தலைவர்கள் கூட்டத்தில் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சா் ஜனக பண்டார தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச சகைளுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கட்டுப்பாடு அற்ற விதத்தில் சலுகைகள் ஏற்பாடு செய்யபபடுவதுடன் புதிதாக ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாகாணசபை உறுப்பினர்களுக்கான படியினை அதிகரிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-8)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் 'ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று பி.ப. 4மணிக்கு இடம் பெறவுள்ளது.

இச் சித்திரத்தேரை திருநெல்வேலி விநாயகர் சிற்பாலய முதலவர் கலாபூஷணம் சு.இராசரத்தினம தலைமையிலான கலைஞர் குழு நிர்மாணித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின் தேர்,தீர்த்த உற்சவங்கள் முறையே நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவிருக்கின்றன. (உ)

## கல்வியை இடைநிறுத்தியோர்க்கு மீண்டும் கல்வி வாய்ப்பு

(கொழும்பு)

பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியோருக்கு மீண்டும் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளில் தேசியக்கல்வி நிறுவகம் ஈடுபட்டு வருகிறது.

நிறுவகத்தின் பணிப்பாளர் ஜெகத விக்கிரமசிங்க இது குறித்துக் கருத்துக் கூறுகையில்,

கல்விப் பொதுத்தராதர சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சையில் மாணவர்களை சித்தியடைய வைககும் நோக்குடனேயே இந் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனபடி இத்திட்டத்தில் இணைந்து கல்வி பயில்வோருக்கு கைநூல்கள் வழங்கப்படவுள்ளன. இங்கு கல்வியை மேற்கொள்வோர் நாடளாவிய ரீதியில் இதற்கென அமைக்கப்படவுள்ள மையங்களில தமக்குரிய மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவித்துள்ளார். (உ-8)

## நிழல் தரு மரங்கள்நாட்டல்

(யாழ்ப்பாணம்)

உளளூராட்சி வாரத்தினை ஒட்டி யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக கிழமை சுண்டுக்குழி சனசமூக நிலையத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நிழல் தரும் மரங்களை நாட்டவுள்ளனர்.

இதேவேளை, அன்யை தினம் ஈச்சமோட்டை சனசமூக நிலையத திலும் அதை அண்டிய பகுதி களிலும் நிழல் தரும் மரங்கள் நாட்டப்படவுள்ளன.

யாழ். மாநகரசபை ஆணையாளர் இ. இராமலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

(உ-19,5)

## குற்றத்தடுப்புப் பிரிவை காரைநகரில் முழுமையாக இயக்க நடவடிக்கை

(காரைநகர்)

காரைநகர் பொலிஸ் நிலையத்திற்கு மேலதிக பொலிஸ் உத்தியோகத்தர்கள் விரைவில் நியமிக்கப்படுவர் அவ்வாறு நியமிக்கப்படும் பட்சத்தில் குற்றத் தடுப்புப் பிரிவு காரைநகரில் முழுமையாக இயங்கி களவுகளையும், வீதிவிபத்துக்களையும் தடுக்க முடியும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ்.ஆர்.வானகுறு.

யாழ்.மாவட்ட பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் காரைநகர் பொலிஸ் நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டனர்.

காரைநகர் பொலிஸ் நிலைய நிலைமைகளையும் குறைபாடுகளையும் கேட்டறிந்த இக்குழுவினர் காரைநகர் பிரதேச கிராமசேவையாளர்களுடனும் கலந்துரையாடினர்.

கிராமசேவையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கிராம சேவையாளர்களின் கேள்விகளிற்கு பதிலளிக்கையிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், காரைநகர் கசூர்னாக் கடற்கரையில் உல்லாசப் பிரயாணிகள் அதிகமாக வரும் நாட்களான லீவு நாட்களில் தற்போது பொலிஸார் கடமையில் ஈடுபட்ட போதிலும் இனி வரும் காலங்களில் காவல்நிலையமாக நிறுவப்பட்டு லீவு நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00மணிவரை சேவையாற்ற முடியும்.

இதன்மூலம் கசூர்னா கடற்கரையில் மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் மற்றும் குழப்பத்தில் ஈடுபடுவோர் தண்டனைக் குட்படுத்தப்படுவர்.

இரவு நேரங்களில் களவுகளைத் தடுக்க ரோந்து நடவடிக்கைகளில் பொலிஸாரை ஈடுபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொலிஸ் உயரதிகாரிகள் குழுவில் ஊர்கவாற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரஞ்சித் கொட்டச்சி, காரைநகர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டிஎச். எச்ஜி அசோக் உட்பட பலர் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (உ-246)

## பொறுப்பு கைமாற்றம் குறித்து ஜே.வி.பி.கடும் அதிருப்தி

(கொழும்பு)

விவசாயத்துறை அமைச்சின் சில பொறுப்புக்களை ஜனாதிபதி வேறோர் அமைச்சுக்கு பகிர்ந்தளித்திருப்பது குறித்து ஜே.வி.பி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி வர்த்தகமானியில் இந்த மாற்றங்கள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் இந்த மாற்றங்கள் குறித்து தம்முடன் ஜனாதிபதி கலந்தாலோசனை எதுவும் மேற்கொள்வில்லை எனவும் குற்றஞ்சாட்டி ஜே.வி.பி. கட்சியின் செய லாளர் ரில்வின் சில்வா நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சி என்ற வகையில் தம்முடன் இதுபற்றி எவ்வித கலந்தாலோசனைகளும் மேற்கொள்ளாது தமது கட்சியின் உறுப்பினர் வகிக்கும் விவசாயத்துறையின் கீழ்வரும் தேசிய நீர்ப்பாசன கொள்கை தொடர்பான விடயத்தை ஆற்றுப்படுக்கைத்துறை அமைச்சர் மைத்திரி பால சிறிசேனவின் அமைச்சுடன் இணைத்திருப்பது யார்த்தமற்ற செயல் என ரில்வின் சில்வா அனுப்பியுள்ள கடிததத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-121)





**யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றத்தின் அழகெழல்-2004 அங்குரார்ப்பண நிகழ்வில் பீடாதிபதி தி.கமலநாதன், அழகெழல்-2004 போட்டி இணைப்பாளர் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.**

# மண்கிண்டி மலை முகாம் தாக்குதல் வெற்றி விழா

(கிளிநொச்சி)

மண்கிண்டிமலையில் நிலை கொண்டிருந்த சிங்களப் படைகள் எமது மக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் களைக் கண்டு அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களுக்கு விடுதலை அளிப்பதற்காகவே தான் மண்கிண்டி இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்ற திட்டத்தை தேசியத் தலைவர் வகுத்தார்.

இவ்வாறு கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ரங்கன் தெரிவித்துள்ளார். கடந்த 25 ஆம் திகதி முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் இதயபூமி வெற்றிச் சமரில் வீரகாவியமான 10 மாவீரர்கள் நினைவாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயத்தில் நடைபெற்ற இதயபூமி தாக்குதல் வெற்றிவிழா நிகழ்வில் கலந்து சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தாயக விடுதலைப் போராட்டத்தில் இன்றைய நாள் ஒரு வித்தியாசமான நாள். தமிழீழத்தின் இதயத்தில் நிலை கொண்டு எமது மக்களின் வாழ்வைச் சிதைத்து சின்னாபின்னமாக்கி வந்த இராணுவத்தினரை மண்கிண்டி மலையில் வைத்து எமது போராளிகள் தாக்கி சின்னாபின்னமாக்கினர். எதிரி தலை தெறிக்க ஓடினான். இந்த முகாமை வெற்றிகொண்டு எமது மக்களுக்கு நிம்மதியான வாழ்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வெயில், பனி, மழை, ஓய்வு, உறக்கம் என்பன அத்தனையும் துறந்து செயல்பட்டதன் காரணத்தால் தான் நாம் இந்த முகாமை வீழ்த்தினோம். அப்போதைய சூழலில் நாம் இந்த முகாமை வெற்றி கொண்டதனால் எம்மீது எதிரி கொண்டிருந்த அச்சம் மேலும் அதிகரித்தது என அவர் மேலும் தெரிவித்தார். (உ-121)

## நாய்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்மன் கோயில் வீதி, ஆஸ்பத்திரிவீதி, நாராயணன் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்கள் இன்று வியாழக்கிழமை பிடித்து அழிக்கப்படவுள்ளன. (ச)

# ஜனாதிபதி சந்திரிகா தாய்லாந்து பயணம்

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும்



வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் தாய்லாந்து பயணமாகவுள்ளனர்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் நாளை வெள்ளிக்கிழமையும், மறுநாளும் நடைபெறவுள்ள 'பெம்ஸ்டிக்' மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் அங்கு பயணமாகவுள்ளதாகத் தெரியவருகிறது.


மேற்படி மாநாட்டில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், மியன்மார், தாய்லாந்து மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தியாவின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள பிரதமர் மன்மோகன் சிங்குடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிப்பட்ட சந்திப்பொன்றையும் நடாத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி சந்திப்பின் போது, இலங்கை - இந்திய பாதுகாப்பு உடன்படிக்கை உள்ளிட்ட மற்றும் பல விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, ஏனைய நாடுகளுடனும் வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படுவதுடன், இவை குறித்த ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. (உ-18)

யாழ்.சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின்
பவள விழாவும் நிறுவுநர் நினைவுதினப் பரிசளிப்பு விழாவும்
இடம் : கல்லூரி மண்டபம்
காலம் : 30.07.2004 வெள்ளிக்கிழமை மு.ப 9.30 மணி
தலைமை : திரு . ச. சிவநேஸ்வரன் (அதிபர்)
முதன்மை விருந்தினர்
உயர்திரு . வீ. இராசையா அவர்கள்
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாணம்)
சிறப்பு விருந்தினர்கள்
திருமதி .றெஜினா இருதயநாதன் அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)
திரு .ப. விக்னேஸ்வரன் அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்)
கௌரவ விருந்தினர்கள்
திரு. க. தனபாலசிங்கம் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)
திரு. அருண் மாஸ்டர் அவர்கள்
(தமிழீழக் கல்விக் கழகம்)
திரு .வி. ராஜன் அவர்கள்
(பொறியியலாளரும் ஸ்தாபகரின்பேரனார், லண்டன்)
திரு .வி.ஈஸ்வரகுமார் அவர்கள்
(பொறியியலாளரும் ஸ்தாபகரின்பேரனார், லண்டன்)
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்
அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சபை, பழையமாணவர் சங்கம்.
(C/381)




# பொய் சொல்லும் முதலமைச்சருக்கு பொய் சொல்லும் நிதியமைச்சர்

## பொய்க்குற்றச்சாட்டுகளுக்கு கருணாநிதி சாட்டை

(சென்னை)

கடந்த 1979 - 80 ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீது விவாதங்கள் நடைபெற்றதற்கான ஆதாரங்களைத் தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்றுமுன்தினம் வெளியிட்டார்.

இந்த ஆதாரங்கள் உண்மை தானென நிதியமைச்சர் பொன்னையன் ஒப்புக்கொள்ளவில்லையென்றால் சட்ட சபைக் குறிப்புப் புத்தகங்களை எரிக்கப்போவதாக அவர் கூறியுள்ளார்.


இது தொடர்பாகச் செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி 1979 -80 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் மானியக்கோரிக்கைகள் மீது விவாதங்கள் நடைபெறவில்லையெனக் கூறிய பொன்னையன் மீது உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரப் போவதாகத் தெரிவித்தார்.

பொய் சொல்லும் நிதியமைச்சரை வைத்துக் கொண்டு முதலமைச்சர் எப்படிச் செயல்பட முடியுமென்று அவர் வினா எழுப்பினார்.

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு கெட்டுப்போனதற்குத் தாமும் தி.மு.க.வினருமே காரணம் எனக் கூறும் முதலமைச்சர் அதற்கான ஆதாரங்கள் வைத்திருந்தால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரத் தயாரா என்று கருணாநிதி கேட்டார்.

மோரில் விஷம் கலந்து எம்.ஜி. இராமச்சந்திரனை ஜானகி அம்மாள் கொன்றார் என்பது உட்படக் கடந்த காலங்களில் ஜெயலலிதா பல்வேறு பொய்யான தகவல்களைத் தெரிவித்துள்ளதாகக் கூறி அவற்றைக் கருணாநிதி பட்டியலிட்டார்.

தஞ்சை விவசாயிகளைப் பழிவாங்குவதற்காகவே மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட ஜெயலலிதா மறுத்து வருவதாக அவர் தெரிவித்தார். (து)



இந்தியா - சீனா இடையிலான எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை தலைநகர் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.எம்.தீட்சித் தலைமையிலான குழு, சீன வெளியுறவுத்துறை அமைச்சர் தாய் பிங்குவா தலைமையிலான குழுவுடன் பேசியது.

## மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தைக் கலைக்க தமிழக அரசு முடிவு

(சென்னை)

அரச ஊழியர்களின் புகார்களை விசாரித்து வரும் மாநில நிர்வாக தீர்ப்பாயத்தைக் கலைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

சட்ட சபையில் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த மானியத்துக்குப் பதிலளித்த பொதுப்பணித்துறை அமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் இதனைத் தெரிவித்தார்.

அப்போது அரசுப்பணி சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றமே போதுமானது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

1985 ஆம் ஆண்டு நிர்வாகத் தீர்ப்பாயச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்து நிர்வாகத் தீர்ப்பாயத்தைக் கலைத்து விடலாமெனக் கொள்கை முடிவு எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (து)

# இந்தியச் செய்திகள்

## கேரளாவில் தொடரும் மாணவர் ஆர்ப்பாட்டம்

கேரளாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மாணவ அமைப்பினர் வங்கிகளுக்குத் தீ வைத்தும் கண்டனப் பேரணிகள் நடத்தியும் தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

பொறியியல் கல்லூரி மாணவியின் தற்கொலையையொட்டி நடைபெற்றுவரும் இப் போராட்டத்தையடுத்துக் கேரளாவிலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் ஒரு வாரகால விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வீச்சு, தீ வைப்பு, சூறையாடல் என கேரளாவில் கடந்த 5 நாட்களாகப் பதற்றத்துக்குக் குறைவேயில்லை.

கல்விக் கடன் கிடைக்காமல் ரஜினி என்ற பொறியியல் மாணவி தற்கொலை செய்து கொண்டதையடுத்து மாணவ அமைப்புக்கள் அனைத்தும் ஒன்று திரண்டு நடத்தி வரும் போராட்டமே இதற்குக் காரணம். திருவனந்தபுர நீதிமன்ற வளாகத்தை முற்றுகையிட்ட மாணவர்களை பொலிஸார் தடியடி நடத்தி விரட்டினர்.

மாணவர்களின் கல்வீச்சுத் தாக்குதல்கள் கேரளாவின் பல பகுதிகளிலும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. வங்கிக் கிளைகள் பல தீ வைத்துத் தாக்கப்பட்டன. (து)

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை - குறள்

வலம்புரி

## சமாதானம் ஏற்படுவதாயின் மக்கள் எழுச்சி தேவை

சமாதானத்தின் மீதான நம்பிக்கை வலுவிழந்து வருகின்றது. அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளி ஒருவருக்கு எத்தனை காலம் செயற்கை சுவாசம் கொடுக்கமுடியும். ஒரு கட்டத்தில், நம்மால் முடியாதென வைத்தியர்கள் கையைவிரிப்பதுபோல், நோர்வேயும் கையை விரிக்கும் காலம் நெருங்கிவிட்டது. இதுபற்றி நேற்றைய தினமும் இப்பகுதியில் பிரஸ்தாபித்திருந்தோம்.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் உயிர்ப்புப்பெறும் சாத்தியம் இல்லை என்ற உண்மை ஓரளவு உறுதியாகிவிட்டது.

இந்நிலையில் மீண்டும் ஒரு யுத்தமே அடுத்தகட்டம் என்பதாக, நாட்டு நிலைமை மாறியுள்ளது. சமாதான முயற்சியின் ஏற்பாட்டாளராக இருக்கும் நோர்வே அரசு தேவையில்லாத விடயத்தில் தலையிட்டு விட்டதாகக் கருதுகிறது. இஃது நியாயமானதும் கூட.

இலங்கையுடன் எவ்வகையிலும் தொடர்பைக் கொண்டிராத நோர்வே நாடு இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தை மனிதாபிமான ரீதியில் தீர்ப்பதற்காக தலையிட்டது. எனினும், அந்நாட்டின் உயர்ந்த சிந்தனைக்கு இலங்கை அரசு காத்திரமான மதிப்பை வழங்கவில்லை.

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் பொறுப்பற்றமுறையில் நடந்துகொண்டன. இலங்கையின் விவகாரத்தில் நோர்வே தலையிடுவதாக அந்தக் கட்சிகள் கொக்கரித்தன. இருந்தும் மனித அழிவுகளைத் தடுக்கவேண்டுமென்ற உயரிய நோக்கோடு கொக்கரிப்புக்கள், ஆர்ப்பரிப்புக்கள் அனைத்தையும் பொருட்படுத்தாமல் சமாதான முயற்சியில் நோர்வே அரசு ஈடுபட்டுவருகிறது.

எதுவித சொந்த நலனுமற்ற மனிதாபிமானத்தின் அடிப்படையில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த விளைந்த நோர்வேக்கு, தனது சமாதானப் பணியில் திருப்தி ஏற்படவில்லை என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

இதனால் சமாதான முயற்சியிலிருந்து அந்நாடு விலகிக்கொள்ளும் முடிவை எடுத்தால்கூட அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வாறு ஒரு முடிவை நோர்வே அரசு எடுக்குமாயின் அதன் பின்னரே ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற கட்சிகள் தாம்விட்ட தவறை உணர்ந்துகொள்ளும். எனினும், அது கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்பதாகவே இருக்கும் என்ற உண்மையையும் இங்கு குறிப்பிடுவது அவசியமானதாகும்.

இலங்கை இனவிவகாரத்தைப் பொறுத்தவரை அதனை ஓர் முடிவுக்குக் கொண்டுவரமுடியாமைக்கான காரணமாக "காலம் கடந்த பிரச்சினை" என்பதையே இனங்காட்டமுடியும். அதாவது, தமிழ் மக்கள் தமது உரிமை குறித்து நடத்திய அகிம்சைப் போராட்டங்களின் போது அந்தப் போராட்டங்களை சிங்கள ஆட்சியாளர்கள் மதித்து நடந்திருப்பார்களேயானால் - அகிம்சை வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்பட்டிருந்தால் இன்றைய ஆயுதப்போராட்டம் என்பது தேவையற்றதாக இருந்திருக்கும்.

அன்றுவிட்ட தவறு இன்று பெருவிருட்சமாகியுள்ளது. இதனாலேயே வெளிநாட்டு உதவியுடன்கூட பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியவில்லை. இருந்தும், இப்போதிருக்கின்ற இறுக்கமான சூழ்நிலை கூடப் பரவாயில்லை என எடுத்துக்கொள்வது, நிலைமை மேலும் ஊதிப் பருப்பதை தவிர்க்கும் நடவடிக்கையாக இருக்கும்.

ஆனால் அத்தகையதொரு முடிவை எடுக்கும் மனநிலையில் சிங்கள ஆட்சியாளர்கள் இல்லை. அவர்களைப் பொறுத்தவரை மக்களின் அழிவு, நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, வறுமையின் தாண்டவம், மக்கள் மத்தியில் யுத்தம் ஏற்படுத்திய தாக்கம் பற்றி எதுவித கவலையும் கிடையாது.

ஆக, ஆட்சிக்கட்டிலிருந்து கொண்டு அதன் மூலம் கிடைக்கக்கூடிய சலுகைகளையும், சுகபோகங்களையும் அனுபவிப்பதே அவர்களின் நோக்கமாகும். அதற்காக அவர்கள் நாட்டைக் குட்டிச்சுவராக்கவும் தயங்கமாட்டார்கள். இதற்கு நாட்டுமக்களின் மௌனமும் காரணமாகும்.

சமாதானம் எனக் கூறிக்கொண்டு வாக்குகளை அபகரித்தவர்கள், சமாதானத்தை அடைவதற்கான வழியில் செல்லத்தவறும்போது மக்கள் புரட்சி ஒன்று எழவேண்டும்.

அவ்வாறு மக்கள் புரட்சிவெடிக்கும்போதே நாட்டில் சமாதானம் குடிபுகும். இல்லையேல் இனவாத ஆட்சியாளர்கள் யுத்தத்தின் மூலம் மக்களை அழித்தே தீருவர்.

### பொலிஸ் பதவி உயர்வு குறித்து

# பொதுமக்கள் பாதுகாப்பு சட்ட அமைச்சு பரிசீலனை

(கொழும்பு)

அண்மையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வு குறித்து பொதுமக்கள் பாதுகாப்புச சட்ட அமைச்சு பரிசீலனை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமையவே அமைச்சினால் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்தப் பதவி உயர்வுகளின் ஒழுங்கீனம் குறித்து தேசிய பொலிஸ்ஆணைக்குழுவிடம் விசாரணை மேற்கொண்டு ஒழுங்கீனமான பதவி உயர்வுகளை ரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, ஒழுங்கீனமான முறையில் மூவாயிரத்து 58 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதும் இவர்களில் 47 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாகவே பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## நாவலர் மண்டபத்தில் இன்று பிரயோக அரங்கக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்து மன்செஸ்ரர் பல்கலைக்கழக நாடகத்துறை விரிவுரையாளர் ஜேம்ஸ் தொம்சன் யாழ்ப்பாணம் நாவலர் மண் டபத்தில் இன்று மாலை 4.00 மணிக்கு பிரயோக அரங்கு (**Applied Theare**) என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளார். இக்கருத்தரங்கை யாழ். செயல்திறன் அரங்க இயக்கம் ஒழுங்கு செய்துள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள அரங்கவியலாளர்களுடன் கடந்த 4 வருடங்களாக தொடர்புபட்டு பணியாற்றி வரும் ஜேம்ஸ் தொம்சன் ஈழத்தமிழ் அரங்கோடு நிறைந்த பரீட்சையம் உள்ளவர்.

2000 ,2002 ஆம் அண்டுகளில் யாழ்ப்பாணத்தில் பிரயோக அரங்கக் களப்பயிற்சிகளை நடத்தியுள்ளதுடன் சிறைச்சாலைகளில் அரங்கினூடாக வேலைசெய்த நிறைந்த அனுபவங்கள் உடைய இவர் இலங்கையில் அனைத்து அரங்கத்துறை யினரையும் இணைத்து **Big Circle** பெரிய வட்டம் என்ற அரங்க அமைப்பை உருவாக்கி இயக்கி வருகிறார்.

இவர் பிரயோக அரங்கில் (**Applied Theatre**) நிபுணத்துவம் உடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கருத்தரங்கில் பிரயோக அரங்கு என்றால் என்ன? பிரயோக அரங்கில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் எவை? நியம அரங்கிற்கும் பிரயோக அரங்கிற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் என்ன? அரங்கை எங்கெல்லாம் பிரயோகிக்கலாம் பிரயோக அரங்கச் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடியவர்களிடம் வேண்டப்படும் தகைமைகள்,வழங்கப்பட வேண்டிய பயிற்சி,தமிழ் அரங்கில் பிரயோக அரங்கச் செயற்பாடுகள் எவ்வாறு காணப்படுகின்றன போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

கருத்தரங்கு தமிழ்மொழி பெயர்ப்புடன் நடைபெறுவதால் ஆர்வமுள்ளவர்கள் எவரும் பங்குபற்றலாமென செயல்திறன் அரங்க இயக்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (உ)

### மாணவர் பாடசாலை அனுமதியில்

## இடம்பெறும் மோசடிகளை கண்டறிய குழு அமைப்பு

பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்கும் முறையில் இடம்பெற்றுவரும் ஊழல் மோசடிகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

2006ஆம் ஆண்டில் அறிமுகமாகவுள்ள புதிய திட்டத்தில் மாணவர்கள் அனுமதிப் பற்றிய ஆலோசனைகளை மக்கள் வழங்கவேண்டும் எனவும் இதற்காக குழு ஒன்று நியமிக் கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்கும்போது இடம்பெறும் ஊழல் மோசடிகள் குறித்து பெற்றோர்கள் மேற்படி குழுவிடம் தெரிவிக்கலாம் எனவும் அறிவித்துள்ளது. (உ-60,10)

## திடீர்சோதனையை அதிகரிக்க திறமையுள்ள அதிகாரிகள் இணைப்பு

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மேற்கொண்டுவரும் திடீர் சோதனைகளை அதிகரிப்பதற்காக திறமையுள்ள அதிகாரிகளை சோத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கான நேர்முகப் பரீட்சை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுளளது. அரச ஊழியர்களுக்கு எதிரான இலஞ்ச ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகள் பற்றி பொதுமக்களிடம் இருந்து அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்துள்ள தையடுத்தே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இத்தகைய நட வடிக்கையை எடுத்துளளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளார்கள். (உ-60,10)

### சாயி அருளமுதம்



உங்கள் இச்சைகளையும், மனவிருப்பங்களையும், வாஸனாக்களையும், வீண் எண்ணங்களையும், இறைவனிடம் சரணடையச் செய்துவிட்டால் அவர் உங்களைச் சரியாக வழிநடத்தி அமைதியையும், ஆனந்தத்தையும் அருளுவார். வெவ்வேறு எல்லைகளையும், நிறையற்ற இன்பங்களையும் நாடி ஓடாதீர்கள். எல்லாவற்றையும் இறைவனிடம் விட்டுவிடுங்கள். எது நடந்தாலும் அது அவருடைய சங்கல்பம் என ஏற்றுக் கொள்ளுங்கள்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## கிராம அலுவலருக்கு ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சி நெறி வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நியாப் நிதி உதவியுடன் நடைபெற்று வருகின்றது.

ஒரு தொகுதி கிராம அலுவலர்களுக்கான பயிற்சி கடந்த 24,25ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இன்னொரு தொகுதி கிராம அலுவலர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (உ-19,5)

## படுகொலைகளை விசாரிக்க இரு விசேட பொலிஸ் குழுக்கள்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப்பகுதியான கொட்டாவவிலுள்ள ஆடம்பர வீட்டில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளவென இரு விஷேட பொலிஸ குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

மேற்படி குழுவினர் சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு அருகாமையிலுள்ள காட்டுப்பகுதிகளில் சென்று தீவிர தேடுதல் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதுடன், அயலிலுள்ள பொதுமக்களிடம் இருந்தும் வாக்குமூலங்களைப் பெறவுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை,மேற்படி சம்பவத்தில் கொலையுண்டவர்களில் அடையாளம் காணப்பட்டோரின் சடலங்களைப் பொறுப்பேற்பதற்காக உறவினர்கள் நீதிமன்றத்தின் அனுமதியை கோரியுள்ளதாகவும் கொட்டாவ பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார். (உ-18,61)

## சுகாதார உத்தியோகத்தரின் சேவை இனி 24 மணிநேரமும்

(சுதுமலை)

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு குடும்ப சேவை சுகாதார உத்தியோகத்தர் கட்டாயம் 24 மணிநேரமும் சேவை செய்வது அவசியம் என வடக்கு-கிழக்கு மாகாண சுகா தார அமைச்சு சகல பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளிற்கும அறிவித்துள்ளது.

ஆரம்ப சுகாதார சேவை நிலையங்களில் தாய், சேய் நலனை மேம்படுத்துவதற்கு யுனிசெவ் அனுசரணையுடன் பல்வேறு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நீர், மின்சாரவதிகளும் வழங்கப்பட்டிருப்பதால் இரவு வேளைகளில் அரசினர் வைத்தியசாலைக்கு மக்கள் செலவதைக்குறைத்து கிராமத்தில் இயங்கும் சிகிச்சை நிலையதில தாய் சேய் நலசேவையை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும்.

அடுத்த சில மாதங்களுக்குள் புதிய குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் சேவையில் இணைக்கப்பட்டு அவர்களிற்கு பயிற்சி வழங்கப்பட்டு வெற்றிடமாக உள்ள இடங்களிற்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் யுனிசெவ் நிறுவனத்தினால் குடும்ப சுகாதார சேவையாளர்களிற்கு தாய்,சேய் நலக் கவனிப்பை மேம்படுத்தும் நோக்கில் புதிய சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-252)

### உயர் தேசிய கணக்கியல் பட்டதாரிகள்

## யாழ். செயலகம் முன்பாக போராட்டம் நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தகப் பட்டதாரிகள் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்.செயலகத்திற்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வேலையற்ற பட்டதாரிகளை பொருத்தமான அரச துறைகளில் பயிலுநர்களாக இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை உயர்தேசிய கணக்கியல், வர்த்தகப் பட்டதாரிகள் அனுப்புவதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தது.

எனினும், பட்டதாரிகளுக்கான சத்தியக்கூற்று விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்ட போதும், இவ் விண்ணப்பங்கள் தமக்கு கிடைக்காததினாலேயே தாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அவர்கள் தெரிவித்தனர்.

விண்ணப்பங்களை அனுப்ப அனுமதித்த போதிலும், தமக்கு சத்தியக் கூற்று விண்ணப்பங்கள் அனுப்பாமைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்தவேண்டும் என்று அவர்கள் உண்ணா விரதப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ச)

## வன்முறை தொடருமானால்...

தடைப்பட்டுப்போயுள்ள அரசு-விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆராய்வதற்கு இலங்கை வந்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் நாடு திரும்பும் முன் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை அறிந்துகொண்ட பின்பே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையில் தற்போது காணப்படும் சமாதானப் பேச்சுவார்த்தையின் தேக்கநிலை, யுத்த நிறுத்த உடன்படிக்கை எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் தற்போது காணப்படும் சூழ்நிலை ஆபத்துக்கள் நிறைந்ததாகவும், விரக்தியை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்துள்ளது. இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையானது கொடிய யுத்தத்தை முடக்கி வைத்ததேயொழிய, அது இனப் பிரச்சினைக்குரிய தீர்வு எதனையும் ஏற்படுத்தவில்லை என்பதை இலங்கை மக்களில் பலர் மறந்து விட்டனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு சுமார் 30 மாதங்கள் சென்ற நிலையில் முடங்கிப்போயிருந்த யுத்தம் இப்போது கொஞ்சம்கொஞ்சமாக சிலிர்த்துக்கொள்வதாகத் தெரிகிறது.

அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால், குறிப்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புறநகர் பகுதியில் விடுதலைப் புலிகளினால் விலக்கப்பட்ட கருணா அணியைச் சேர்ந்த எட்டுப்பேர் படுகொலை செய்யப்பட்டதையும், இம்மாத முற்பகுதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலும் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படக்கூடிய சூழ்நிலைக்கு இலங்கையைத் தள்ளக்கூடும்.

நடந்துமுடிந்த கொலைச் சம்பவங்களைப்போல் தொடர்ந்தும் கொலைகள் நடைபெறுமானால் யுத்தநிறுத்தம் கேள்விக்குறியாகி உக்கிரமற்ற வகையில் நடக்கும் யுத்தம் ஒன்றுக்கு வழிவகுத்து விடும்.

இந்நிலையில் இலங்கை, அரசும், விடுதலைப் புலிகளும், மக்களும் போர் ஏற்படுவதைத் தவிர்க்கும் விடயங்களில் அதிகளவு கவனம் செலுத்தவேண்டும் என்று நோர்வே விரும்புவதாக விடார் ஹெல்கீசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ம-121,08)

## புலிகள்....

சொந்தமான காணியில் பிற இனத்தவர்களின் அத்துமீறல்கள் சில இடங்களில் இடம்பெற்றுள்ளதால், அந்தக் காணிகளை அடையாளம்கண்டு அவற்றை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து நேற்றைய சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் மற்றும் அம்பாறை மாவட்ட தமிழர் மேம்பாட்டு சபைத் தலைவர் என். தர்மலிங்கம் ஆகியோர் பங்கு கொண்டனர்.

முஸ்லிம்கள் தரப்பில் அனைத்துப் பள்ளிவாசல்களின் செயலாளர் ஐ.இப்ராஹிம் தலைமையில் காசி மௌலவி உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர். (த-121)

## செப்ரெம்பர்...

செலவிற்கும், மின்உற்பத்திக்கும் மட்டுமே இது உதவும் என மின் சாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இறுதித் தடவையாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் 2001 இல் மின்கட்டண அதிகரிப்பு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

## விடார்...

கள் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து பின்வாங்குவது கவலையைத் தருகின்றது.

இதேவேளை அரசினதும், ஜனாதிபதியினதும் சமாதான நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவை வழங்க முன்வந்திருப்பதை வரவேற்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (உ-60,10)

## இளைஞனுக்கு...

ரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை, மொறட்டுவ சொய்ஸாபுர வீடமைப்புத் திட்டத்திற்கு அண்மையில் நேற்று இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பாதாளஉலகக் கோஷ்டியினரே இந்த இளைஞனை சுட்டுக் கொன்றிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(த-08)

## கொட்டாவ...

ளதாகவும் அவர் கூறினார்.

சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்திலுள்ள பிரதேசவாசிகளிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி கொட்டாவப் பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கருணாவின் சகாக்கள் எட்டுப்பேர் சுட்டுக்கொல்லப்பட்டமை தெரிந்ததே. (ச-121)

## பாயாசத்தில்...

கும் பாயாசம் வழங்கினார். அதற்குள் மயக்க மருந்து கலக்கப்பட்டது. அதனை அருந்தியவர்கள் மயக்கமடைந்தனர். முன்னேற்பாட்டுடன் செயற்பட்ட தபோ, வீட்டின் பின் கதவைப் பூட்டவில்லை. அதிகாலை 3.30 மணிக்கு கொலையாளிகள் பின்வாசலால் நுழைந்து 9 மில்லிமீற்றர் துப்பாக்கி மூலம் எட்டுப் பேரையும் சுட்டுக்கொன்றனர்.

சுட்ட பின்னர் கொலையாளிகள் அந்த வீட்டில் தேடுதல் நடத்தினர். கைத்தொலைபேசிகளிலிருந்த சிம் காட்களையும் அகற்றிக கொண்டு உடனடியாக அங்கிருந்து புறப்பட்டு கிழக்கு மாகாணம் நோககிச் சென்றுவிட்டனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## 7 வது...

கம் ஆகியோர் ஏற்றினர்.

தேசியக் கொடியினை காவல்துறை நடுவப் பணியகக் கண்காணிப்பாளர் மாதவன் மாஸ்ரர் ஏற்றினார். நீதிமன்றப் பெயர்ப் பலகையினை மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் திரைநீக்கம் செய்தார்.

அலுவலகத்தை முஸ்லிம் பிரமுகர் அகமது லெப்பை அதம்பாவா திறந்துவைத்தார். நீதிமன்ற அரங்கை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் திறந்துவைத்தார். இந்நிகழ்வில், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். (ச)

## கொக்குவில் இந்துவில் தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் தமிழ் மன்றம் வருடாந்தம் நடத்தும் தமிழ்விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு மன்றத் தலைவர் ஸ்ரீ. நிதர்சன் தலைமையில் நடைபெறும்.

கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும் இந்நிகழ்விற்கு யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நிகழ்வில், ஆசியுரையை கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் நிகழ்த்துவார். (ந)

## வெளிநாட்டு...

ஸார் தெரிவித்துள்ளனர்.

தீவிபத்துக்குள்ளான கப்பலில் இருந்த ஏனைய மாலுமிகளை அப்பகுதியால் சென்ற மற்றுமோர் கப்பலில் இருந்தவர்கள் காப்பாற்றியுள்ளனர்.

இழுவைப்படகு ஒன்றின் மூலம் விபத்துக்குள்ளான கப்பலையும், கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களையும் காலித்துறைமுகத்திற்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (த-121,10)

## ஐ.நா. மனித உரிமை...

கூட்டத்தொடரானது ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் கொள்கை உருவாக்கல் நெறிமுறைகளின் கீழ் செயற்படுகின்றது. ஆணைக்குழு முன் இலங்கையின் சட்ட ஒழுங்கு நடைமுறை தொடர்பாக ஆசிய சட்ட வள நிறுவனம் சமர்ப்பித்த விரிவான அறிக்கை இலங்கை மீதான கடும் விமர்சனங்களிற்கு வழிசமைத்துள்ளது.

இவ்வறிக்கையானது எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களுக்கும், பார்வையாளர்களாக பங்கேற்ற நாடுகளிற்கும் ஐ.நா பணிமனையால் விநியோகிக்கப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் உலக நாடுகள் தொடர்பான விவாதத்தில் பங்கேற்ற இரு சர்வதேச நிறுவனங்கள் இவ்விவகாரத்தை கையிலெடுத்தன. இவ்விடயம் தொடர்பாக உரையாற்றிய ஆசிய சட்ட வள நிறுவனத்தின் ஐ.நாவிற்கான பிரதிநிதி, இலங்கையின் சட்ட அமுலாக்கல் நிலவரத்தில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள் தொடர்பான அச்சத்தை வெளியிட்டார்.

அரசியல் அழுத்தம் மற்றும் பல காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களே தொடர்ந்தும் அடக்குமுறைக்குட்பட்டு பாதிக்கப்படும் ஆபத்தான சூழல் அங்கு எழுந்துள்ளதற்கான ஆதாரங்களை முன்வைத்தார். எனவே உடனடியாக ஐ.நா மனித உரிமைகள் உப ஆணைக்குழு இலங்கை நிலையைக் கருத்தில் எடுத்து இதனை ஆராய்வதற்கான வழிகளை முன்னெடுக்கவேண்டும் என வேண்டுகோள்விடுத்தார்.

இவரிற்கு முன்னர் பேசிய மக்களின் உரிமைக்கும் விடுதலைக்குமான சர்வதேச நிறுவனத்தின் பிரதிநிதி திருமதி வெரீனா கிராவ் அவர்கள் இலங்கையில் சட்ட ஒழுங்கு நிலை படிப்படியாக அரசியல் மயப்படுத்தப்பட்டு, இராணுவ மயப்படுத்தப்பட்டு இன்று சீரழிந்துவருகின்றது எனச் சாடினார்.

செம்மணிப் புதைகுழி உட்பட பல கோரமான விவகாரங்களை அவர் இதற்காகப் பட்டியலிட்டு மிக தாக்கமான உரையினை ஆற்றினார் பல உலக நாடுகளின் பிரதிநிதிகளும், சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்களும் அவரது உரையினைக் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தனர். இது இலங்கைக்கு எதிரான கடும் விமர்சனமான அமைந்திருந்தது.

(த)

## மகிந்த...

கொண்டனர்.

இதேவேளை நோர்வே வெளிவிவகார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்துள்ளார். இதன்போது அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளிலுள்ள குறைபாடுகள் குறித்து ரணில் விக்கிரமசிங்க நோர்வேத் தூதுவருக்கு சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த)


பிறீடம் பாவனையாளர் கவனத்திற்கு

கொழும்பில் இருந்து தொழில்நுட்ப வல்லுனர்கள் யாழ்ப்பாணத்தில் 31 ஆம் திகதி சனிக்கிழமை அன்று **பிறீடம் பாவனையாளர்களைச்** சந்திக்க விரும்புகிறார்கள்.

தங்கள் பிறீடம் மோட்டார் சைக்கிள் பற்றி சந்தேகங்கள் குறைபாடுகள் இருப்பின் கலந்துரையாடி தீர்வு காணலாம்.

இடம்: இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50, 52,54, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி 2223096

அதிசிறந்த உன்னத பாவனைக்கு பிறீடம் மோட்டார் சைக்கிளை நாடுங்கள். (C/382)

யாழ்ப்பாணத்தில்
இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50,52,54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல. 222 2938, 222 3096
தொலைநகல் : 222 2368





இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.